Computer Today

சித்திரை - 2015

# கம்ப்யூட்டர் டுடே

PUBLIC LIBRARY
JAFFNA

கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை

தகவல் தொழில்நுட்ப மாத இதழ்

விலை - 80/-




ubuntu இயங்கு தளங்கள்

அப்பிள் நிறுவனத்திற்கு பெயர் வந்த கதை தெரியுமா?

Calling WhatsApp

f இல் காணொளிகள் தானாக Play ஆவதை தடுப்பது எப்படி?

Windows 10 தரும் புதிய வசதிகள்

இலங்கையின் முதலாவது தேசிய தமிழ் கணினிச் சஞ்சிகை

IDM NATIONS CAMPUS SINCE 1981

# NATIONS CAMPUS JAFFNA

www.idmedu.lk
www.facebook.com/idmnc.j
www.facebook.com/idmnc

## Courses we offer at our Jaffna Campus

- Certificate in Computer Application (MS Office - ICDL)
- Diploma in English
- Diploma in AutoCAD (2D, 3D)
- International Diploma in Web Engineering
- IDM International Diploma in Business Management
- IDM International Diploma in Software Development
- International Higher Diploma in Business Management
- International Higher Diploma in Marketing
- International Higher Diploma in Software Development
- International Higher Diploma in Networking
- BSc.(Hons) in Computing - Top Up Degree
- BA.(Hons) in Business Management - Top Up Degree

தற்பொழுது IDM கொழும்பு தலைமையகத்தினாலேயே IDM யாழ்ப்பாண கிளை முகாமைத்துவ படுத்தப்படுகின்றது.

HOTLINE 077 441 9901

bucks new university
Charles Sturt University
OPEN UNIVERSITY UNIVERSITI TERBUKA MALAYSIA
bcs The Chartered Institute for IT
BIT
TERTIARY AND VOCATIONAL EDUCATION COMMISSION SRI LANKA
UGC Sri Lanka Recognized Programme
edexcel advancing learning, changing lives
IDM City Campus # 3

# 216, Nawalar Road, Jaffna.
E-mail : idmnc.jaffna@gmail.com

TEL : 021 222 9901

# இதழினுள்ளே.....


- ஜடப் பொருளாய் இருந்த நான்...... – கவிதை
- இந்த நிறுவனங்களுக்கு பெயர்வந்த கதை.........
- இறுவெட்டுகள் பதியும்போது ஏற்படும் பிரச்சினை
- இயங்குதளங்கள்
- Windows 10 புதிய வசதிகள்
- FB காணொளிகள் தானாக இயங்குவதைத் தடுப்பதெப்படி?
- HTC இன் புதிய அறிமுகம்
- Photoshop இற்கு இணையாக
- WiFi signal அதிகரிக்கலாம்
- தமிழ் எழுதலாம் வாங்க
- செல்பேசியில் செல்லினம்
- உலகைச் சுற்றும் சூரிய விமானம்
- Note Pad + +
- Drobbox பயனர்களே உசார்
- செல்பேசி தொலையாமல்
- Word இல் சில வசதிகள்
- கணினிக் குதைகள்
- குழந்தைகளுக்கான விளையாட்டு
- இணையத்தின் தாக்கம்
- தெரியுமா உங்களுக்கு
- ஆங்கிலம் கற்க சிறந்த இணையங்கள்
- கணினி விளையாட்டு உருவாக்கிட
- கண்கள் கவனம்
- கணினி வழித்தமிழ் –நேர்காணல்
- domain கவனம்
- குரோம்காஸ்ட் – புது நுட்பம்
- கணினி வைரஸ்கள்


FREE COPY NOT FOR SALE


## கம்ப்யூட்டர் ருடே

**கனினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை**

அச்சிட்டு வெளியிடுபவர்கள் :

**Uthayan IT Island**

359, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொலைபேசி இல.: 021 5 677 600


**கம்ப்யூட்டர் ருடே யில் உங்கள் ஆக்கங்கள் பிரசுரமாக வேண்டுமா ?**

359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
அல்லது
info@computertoday.lk
என்னும் மின்னஞ்சலுக்கு அனுப்பிவைக்கவும்

## இதழாசிரியரின் இதயத்திலிருந்து......

வாசகர்களுக்கு வணக்கம்!

நீண்டதொரு இடைவெளிக்குப் பின்னர் "கம்ப்யூட்டர் ருடே" வாசகர்களாகிய உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி.

கணினியும் தகவல் தொழில்நுட்பமும் எமது மக்களுக்கு அறிமுகமான காலத்தில் ஆரம்பிக்கப்பட்ட எமது **'கம்ப்யூட்டர் ருடே'** சஞ்சிகையானது கடந்த 15 வருட காலமாக பல இடர்பாடுகளிற்கு மத்தியில் தத்தித் தவழ்ந்து, நடந்து, ஓடி, தவறி விழுந்து என மைல் கற்களை கடந்து இந்த இதழின் மூலம் மீண்டும் உங்களின் கைகளில் வந்து சேர்ந்திருக்கிறது.

வாசிப்புப் பழக்கம் என்பது அருகிவிட்ட இந்த நாட்களில் ஒரு பொழுதுபோக்கு சஞ்சிகையை மாதாந்தம் வெளியிடுவது என்பதே இயலாத காரியமாக மாறிவிட்ட எம் மண்ணில், குறைவான வாசகர் தொகையை கொண்ட தகவல் தொழில்நுட்ப சஞ்சிகை வெளியிடுவது என்பது மிகவும் சிரமமான காரியம் என்பதனை வாசர்களாகிய நீங்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என நம்புகிறோம்.

இருப்பினும், இன்றைய காலத்தின் தேவை கருதி பல அன்பான உள்ளங்களின் வேண்டுகோளிற்கு இணங்கியும் எமது முயற்சியில் சற்றும் மனம் தளராமல் மீண்டும் **'கம்ப்யூட்டர் ருடே'** சஞ்சிகையினை வெளியிடும் முடிவினை எடுத்துள்ளோம்.


"மரங்கள் ஓய்வை விரும்பினாலும்
காற்று விடுவதில்லை
கரைகள் ஓய்வை விரும்பினாலும்
அலைகள் விடுவதில்லை
ஓடி ஓடி ஒழிந்தபோதும்
வாழ்க்கை விடுவதில்லை"

அதேபோல் நாங்கள் ஓய்வை விரும்பினாலும் வாசகர்களாகிய நீங்கள் எங்களை விடுவதாக இல்லை. அந்த வகையில் மீண்டும் **'கம்ப்யூட்டர் ருடே'**யினை வெளியிட ஆரம்பிக்கிறோம். உங்கள் அனைவரினதும் ஆதரவு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் இந்த இதழினை உங்களின் கைகளில் தவழவிடுகிறோம்.

இன்னும் ஒரு **'கம்ப்யூட்டர் ருடே'** இதழில் உங்களை சந்திக்கும் நம்பிக்கையுடன்.....

*அன்புடன்*
*ஆசிரியர்*

## ஜடப்பொருளாய் இருந்த PC நான்



உயிர் கொடுத்த OS நீ
வன்பொருளாய் திரிந்த என்னை
மென்பொருளாய் திருத்தியவள் நீ
Empty CD யாக இருந்த என்னை
சங்கீத பேச்சினால் mp3 ஆக்கியவள் நீ

கணினி இயக்கும் உன் உள்ளங்கைக்குள்
கண்ணியமாய் சிறைப்படும் mouse நான்
நீ இழுக்கும் திசைக்கு வரும்
ஜாய்ஸ்டிக் அடிமை நான்
நீ மடி கொடுப்பாய் என்றால் உன் Laptop நான்

Type அடிக்கத் தெரியாத உன் பிஞ்சு விரல்களால்
செல்லக் குட்டுகள் போடும் Keyboard நான்
உன் ஸ்பரிசம் எனை அழுத்தும் என்றால்
கணினியின் ON switch நான்
நீ உற்று ரசிப்பாய் என்று தெரிந்திருந்தால்
ஒரு Moniter ஆயேனும் நான் பிறந்திருப்பேன்
Shutdown ஆகப் போனவன் உனைப்
பார்த்த கணத்தில் Reboot ஆகிப் போனேனே

கண்ணே! நீ சூடுவாய் என்றால்
நான் தான் உனக்கு வலைப்பூ
முப்போதும் என் மனத்திரையில் ஓடும்
Youtube வீடியோ நீ
அரட்டை பெட்டியில் வரும் Smily நீ
அனுதினமும் நான் தேடும் Google நீ
என் uhardisk நிரப்பிய ஒரே கவிதை நீ
என் அறிவுக்கண்ணை திறந்த விக்கிபீடியா நீ
என் சொப்பனங்களை ஆக்கிரமித்த ஸ்க்ரீன் சேவர் நீ
இருபத்து நான்கு மணி நேரமும் என்னுள் ஓடும்
சேவர் நீ
என் உள்ளத்தை அச்சடித்த கலர் பிரிண்டர் நீ
வைரஸ் தாக்கும் வரை தாமதிக்காதே விரைந்து வா!
நீயும் நானும் இந்த இணையத்தால் இணைவோம்.

**- கணினிப்பித்தன்**

# இந்த நிறுவனங்களுக்கு பெயர் வந்த கதை தெரியுமா?

## அப்பிள் (Apple)

இன்றைய தொழில்நுட்ப உலகத்தில் "அப்பிள்" நிறுவனம் பற்றிக் கேள்விப்படாத வர்களே இல்லை எனலாம். ஆனால் யாராவது இந்த நிறுவனத்திற்குப் பெயர் எப்படி சூட்டப்பட்டது என நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா...? இந்த நிறுவனத்தைக் தோற்றுவித்தவர் ஸ்டீவ் ஜொப்ஸ்(Steve Jobs). இவருக்கு மிகவும் பிடித்தமான பழம் அப்பிள்தான். அவர் தன் நிறுவனத்திற்கு பெயர் வைக்க மூன்று மாதங்கள் தாமதித்து விட்டார். பிறகு சக ஊழியர்களிடம் நீங்கள் ஒருவரும் இதைவிட சிறந்த பெயர் தெரிவிக்கா விட்டால் அப்பிள் என்ற பெயரையே நம் நிறுவனத்தின் பெயராக வைத்து விடுவேன் என்று கூறினாராம். இறுதியில் அந்தப் பெயரே நிலைத்துவிட்டது.

## கூகிள் (Google)


இது முதன் முதலாக கூகால்(Googol) என்று அழைக்கப்பட்டது. கூகால் என்றால் ஒன்றின் பின்னால் நூறு பூச்சியங்கள் போட்டால் வரும் எண் பெறுமானமாகும். இந்த நிறுவனத்தைத் தோற்று வித்தவர்கள் செர்கீபிரின் மற்றும் லரிபேஜ் (Sergeybrin and Larrypage). இவர்கள் தங்கள் திட்டத்தை ஒரு பண முதலீடு செய்யும் நிறுவனம் ஒன்றிற்குச் சமர்ப்பித்தார்கள். அவர்களுக்கு அனுப்பப்பட்ட காசோலையில் கூகிள் (Google) என்று எழுதப்பட்டிருந்தது. இன்று இந்தப் பெயரே நிறுவனத்தின் பெயராக மாறி மிகவும் புகழ் பெற்றுவிட்டது.

## மைக்ரோசொப்ட் (Microsoft)

இந்தப் பெயரைத் தேர்ந்தெடுத்தவர் பில்கேட்ஸ்(Billgates). இந்த நிறுவனம் மைக்ரோ கணினிகளுக்கான மென் பொருளைத் தயாரித்ததால் இந்தப் பெயர் பொருத்தமாக இருந்தது. முதன் முதலில் Micro-soft என்று நடுவில் ஒரு கோடுடன் (Hyphen) எழுதப்பட்டது. பிறகு இந்தக் கோடு மறைந்துவிட்டது.




# இறுவட்டுக்களில் (C.D களில்) பதியும்போது ஏற்படும் பிரச்சினை



அன்றாடம் கணினியைப் பயன் படுத்துபவர்கள் சந்திக்கும் பிரச் சினைகளில், இறுவட்டுக்களைக் (CD) கையாளும் பிரச்சினையும் ஒன்று. இன்றைய சூழ்நிலையில் இறுவட்டுக்களைப் பயன்படுத்துவது கொஞ்சம் கொஞ்ச மாகக் குறைந்து வருகிறது.

Pen Drive பயன்பாடு, கோப்புக்களை (Files) பிரதி செய்து எடுத்துபோவதை மிக எளிதாக மாற்றியுள்ளது. இருப்பினும் ஓரிரு கோப்புக்களைப் பதிந்து, பதியப்பட்ட தரவுகளை யாருக்கேனும் தந்துவிட்டு வரவேண்டும் என்றால் அதற்கு இறுவட்டுத்தான் சரியான வழி. எனவே இறுவட்டுக்களை கையாள்வதில் உள்ள பிரச்சினைகளை இங்கு காணலாம்.

அவசரமாக ஏதேனும் கோப்பை இறுவட்டில் எழுதி எடுத்துக் கொண்டு செல்லத் திட்டமிடுகையில் அது வெளியே வர மறுக்கும். அல்லது எழுத மறுக்கும். எழுத மறுத்து வெளியே வந்துவிட்டால், இன்னொரு இறுவட்டை உள்ளே செலுத்தி எழுதலாம்.

இறுவட்டு வெளியே வரவில்லை என்றால் என்ன செய்யலாம்? இந்தச் சூழ்நிலையை எப்படி எதிர் கொள்ள லாம் என்று பார்க்கலாம். பல வேளைகளில் நாம் ஒரு இறுவட்டை அதன் செலுத்தியில் (Drive) போட்டுப் பயன்படுத்திய பின்னர் வெளியே எடுத்து பாதுகாப்பாக வைக்க மறந்துவிடுகிறோம்.

செலுத்தி பிரச்சினை தருவதற்கு இதுவும் ஒரு காரணமாக அமைய வாய்ப்புகள் இருக்கின்றன. ஒவ்வொரு முறை அதன்பின் windows explorer இயக்குகையில் இறுவட்டுச் செலுத்தி இயங்கும். இது தேவையற்ற ஒன்றாக இருக்கும். இதனால் இறுவட்டிச்செலுத்தி இயக்கத்தில் சில தடங்கல்களை ஏற்படுத்தலாம்.

குறிப்பாக இறுவட்டுக்களில் கோப்பை எழுதி முடித்துவிட்டால், உடனே எடுத்துவிட வேண்டும். இதனால்தான் இறுவட்டில் எழுதுவதற்குப் பயன்படும் Nero போன்ற நிகழ்ச்சி நிரல் இறுவட்டில் எழுதும் வேலை முடிந்துவிட்டால், உடனே அதனை வெளியே தள்ளும் "Eject" என்னும் செயல்பாட்டினை தெரிவு செய்திடும் வகையில் வழிகள் தரப்பட்டுள்ளன.

இறுவட்டு வெளியே வராதநிலையில் அந்த இறுவட்டில் இன்னொரு கோப்பை எழுதிப் பாருங்கள். ஏற்கனவே எழுதிய கோப்பின் வடிவத்தில் (format) இல்லாமல் வேறு வடிவத்தில் எழுதிய கோப்பை பிரதி செய்து பாருங்கள். பதிவு முடிந்தவுடன் இறுவட்டு வெளியே வர வாய்ப்புகள் உள்ளன.

வரமறுக்கும் இறுவட்டினினை எடுக்க இன்னொரு சிறந்த வழி கணினியை மீள்இயக்குதலாகும் (Restart) இதனால் இறுவட்டு வெளியே வரும் வாய்ப்புண்டு. My Computer இனைச் சொடுக்கி (Click) அதில் கிடைக்கும் சாளரத்தில் (Windows) இறுவட்டு செலுத்தியின் இடத்தில் வலது சொடுக்கினை (Right Click) செய்து அதில் Eject என்பதில் சொடுக்கிப் பார்க்கலாம்.

இதில் ஒரு முறை சொடுக்கினால் செய்தால் மட்டும் போதாது. பல முறை சொடுக்குவதால் ஏற்படும் கட்டளைத் திணிப்பில் "செலுத்தி" வெளியே வரலாம். இத்தனை வழிகளையும் கையாண்டு வெளியே வரவில்லை என்றால் இறுதியாக நம பலத்தைப் பிரயோகிக்க வேண்டியதுதான். அது ஒன்றுமில்லை @ ஒரு சிறிய Paper Clip பைப் பிரித்து நீட்டி "செலுத்தியின்" கதவருகில் தெரியும் சிறிய துவாரத்தில் மெதுவாகச் செருகவும். ஒரு இடத்தில் எதிராக ஒரு சிறிய தடுப்பில் நிற்கும். அதனை மெதுவாக அமுத்தினால் கதவு திறக்கப்படும். பின் இறுவட்டினை எடுத்துவிடலாம்.

இறுவட்டு சரியாக அதன் "செலுத்தியின்" பொருத்தவில்லை என்றால் அது உள்ளே செல்லாமல் மீண்டும் மீண்டும் அதன் கதவு திறக்கப்படும். நாம் "செலுத்தியின்" கதவு மூடப்படுவதில்தான் பிரச்சினை என்று முடிவு செய்து பலத்தைப் பயன்படுத்தி கதவை மூடக்கூடாது. பொறுமையாக என்ன பிரச்னை என்று ஆய்வு செய்திட வேண்டும். அதன் முதலாவது செயல்தான் இறுவட்டைச் சரியாக அதன் இடத்தில் வைப்பது.

அப்படிச் சரியாக வைக்காத பட்சத்தில் இறுவட்டுச் செலுத்தியின் செயல்பாட்டில் மாறுதல் ஏற்படும். சரியாக இயங்காது. இதைப போன்ற சூழ்நிலைகளில் இறுவட்டுக்கள் சில நொறுங்கிப்போன நிகழ்வுகளும் நடந்தது உண்டு. எனவே ஒரு இறுவட்டுச் செலுத்திகள் சரியாக இயங்கவில்லை என்றால் நாம் அதனைப் பயன்படுத்தும் முறைதான் சரியில்லை என்று பொருள்.

எனவே கணினி மீது கோபப்படுவதனை விட்டு விட்டு மீண்டும் மீண்டும் அதனைச் சரியாக இயக்க முயற்சிக்க வேண்டும்.


சிலவேளைகளில் வேறு எங்கோ பார்த்துக்கொண்டு ஒரு இறுவட்டின் மீது இன்னொரு இறுவட்டைப்போட்டு இயக்க முயற்சிப்பது, இறுவட்டைத் தலைகீழாக வைத்து இயக்க முயற்சிப்பது, ஒரு இறுவட்டு என்று எண்ணிக் கொண்டு இரண்டு இறுவட்டுக்களைச் செலுத்தியில் வைப்பது போன்ற நிகழ்வுகளும் நிகழலாம். நீங்களும் இந்தத் தவறுகளில் ஒன்றையாவது அவசரத்தில் செய்ய முற்படலாம். அவ்வாறு நேர்ந்துவிடாமல் பார்த்துக் கொள்ளவே இந்த எச்சரிக்கை தரப்படுகிறது.

இறுவட்டுக்களில் தரவுகளைப் பதிந்து வைப்பது நம்பகமான சேமிப்பு என்றாலும் அவையும் என்றாவது ஒருநாள் பழுதடையலாம் அல்லது ஒரு வேளையில் பயன்படுத்த முடியாமல் போகலாம். எனவே இறுவட்டில் தரவினை எழுதிவிட்டோமே என்று அந்தக் கோப்புக்களை முற்றிலுமாக அழித்துவிடக்கூடாது.

வேறு ஒரு ஊடகத்தில் பதிந்து வைக்கலாம். இன்னொரு கணினியில் அல்லது வன்தட்டின் இன்னொரு பகுதியில் போட்டு வைக்கலாம். இவ்வாறு இன்னொரு இடத்தில் பிரதி எடுத்து வைப்பது நல்லது. பயன்படுத்த நல்ல தரமான நிறுவனங்கள் தயாரித்து வழங்கும் இறுவட்டுக்களையே வாங்கவேண்டும். விலை குறைவாக இருக்கிறது என்று தரம் குறைந்த இறுவட்டுக் களைப் வாங்கிப் பயன்படுத்துவது தவறு.



# இயங்கு தளங்கள்




## ubuntu

**உபுண்டு லினக்ஸ்** (UBUNTU LINUX)

இயங்கு தளங்கள் (Operating Systems) கணினியின் முக்கிய பொருளாகும். நீங்கள் அதிநவீன செயலி (Processor) மற்றும் வன்பொருள்கள் (Hardwares) வைத்திருந்தாலும், இயங்குதளத்தின் வேகத்தைப் பொறுத்தே ஒரு கணினியின் வேகம் அமையும். அதனைத் திறம்பட உபயோகிக்கும் பொறுப்பு இயங்கு தளத்தையே சாரும். நவீனமான, வேகமான, உபயோகிக்க எளிதான, திறம்படச் செயலாற்றக் கூடிய ஒரு இயங்கு தளத்தையே அனைவரும் விரும்புவர். தற்போது அதிகம் பயன்படுத்தப்படும் தனிநபர் இயங்கு தளங்கள் ஐந்தினைப் பார்ப்போம்.........


உபுண்டு ஒரு லினக்ஸ் வகை இயங்குதளமாகும். இது டெபியன் லினக்ஸ் ஐ அடிப்படியாகக் கொண்டது. கனொநிகல் (Cannonical) நிறுவனத்தால் இது வடிவமைக்கப்பட்டு முற்றிலும் இலவசமாக வழங்கப்படுகிறது. இது மிகவும் திடமான, பயன்படுத்த எளிதான, பாதுகாப்பான இயங்குதளமாகும். உங்கள் கணினியில் உபுண்டுவை நிறுவுவது (Installation) மிகவும் சுலபம். யார் வேண்டுமானாலும் (http://www.ubuntu.com/desktop) சென்று இலவசமாகப் பதிவிறக்கம் (Download) செய்துகொள்ளலாம்.

இது விண்டோஸ்ஐ விட அளவில் மிகச்சிறிய தாகவும், வைரஸ்சால் பாதிக்கப்படாமலும் உள்ளது.




உபுண்டுவை நிறுவுவதற்கு மிகக் குறைந்தளவு வனபொருள் வளம் (Minimum Hardware) [https://help.ubuntu.com/community/Installation/System Requirements] இருந்தாலே போதும். விண்டோஸ் இயங்கத் தடுமாறும் கணினிகளில் கூட இது சிறப்பாக இயங்குகிறது. லினக்ஸ் அனைத்தும் உலகத்தில் 1.69% மக்களால் பயன்படுத்தப்படுகிறது. கனொநிகல் நிறுவனத்தின் பெருமுயற்சியாலும், எளிதாக, திடமாக உள்ளதாலும், வைரஸ் தொல்லைகள் இல்லாததாலும் இதன் பயன்பாடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

**மக்** (MAC OSX)



அப்பிள் நிறுவனத்தின் மக்கின்டோஷ் (Macintosh) கணினிகளின் மட்டும் இயங்குமாறு வடிவமைக்கப்பட்ட இயங்குதளம் "மக்" ஆகும். இது யுனிக்ஸ் இனை (Unix) அடிப்படையாகக் கொண்டு இயங்குகிறது. இதுவும் கட்டுமஸ்தான, அருமையான இயங்குதளமாகும். இதை நீங்கள் உபயோகிக்க வேண்டுமானால் நீங்கள் அப்பிள் மக்கின்டோஷ் கணினியை வாங்க வேண்டும். இது உலக அளவில் 7.58% மக்களால் பயன்படுத்தப்படுகின்றது.

**விண்டோஸ்:** "பேரைக்கேட்டாலே சும்மா அதிருதில்ல..."




தனிநபர் கணினிகளின் அசைக்கமுடியாத அரசன். நாம் உபயோகித்த முதல் கணினி விண்டோஸ் கணினி யாகத்தான் இருக்கும். 1990-ல் விண்டோஸ் 3.0 வெளி யானதில் இருந்து தற்போது உள்ள விண்டோஸ் 8.1 வரை இதை அடித்துக்கொள்ள ஆளில்லை. இதன் போட்டியாளர்கள் நினைத்துக் கூட பார்க்க முடியாத அளவிற்கு 90% இற்கும் அதிகமான பயனர்களை கொண்டுள்ளது.

விண்டோஸ் 8 11.30% வீதத்துடன் மூன்றாவது இடத் திலும், விண்டோஸ் XP 27.69% துடன் இரண்டாவது இடத்திலும், பெரும்பாண்மை 48.77% வீதத்தினைப் பிடித்துள்ள விண்டோஸ் 7 முதல் இடத்திலும் உள்ளது. மைக்ரோசொப்ட் விண்டோஸ் XP ற்கான support ஐ நிறுத்திவிட்டதால் XP பயனர்கள் குறைந்துகொண்டே வருகின்றனர். மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் அடுத்த வெளியீடாக வரவுள்ள விண்டோஸ் 10 பற்றி தனியாகப் பார்க்கலாம்.

# WhatsApp



WHATSAPP அனைவரும் இலவசமாக Voice Call ஐ பயன்டுத்தும் வசதி நடைமுறைக்கு வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

WHATSAPP பேசும் வசதியை அறிமுகப்படுத்த முடிவு செய்து, கடந்த 1 ஆண்டு காலமாக, இந்தியாவில் தேர்ந்தெடுக்கப்பட்ட சில பயனாளர்களுக்கு மட்டுமே WHATSAPP நிறுவனம் பேசும் வசதியை கொடுத்து பரிசோதனையில் ஈடுபட்டு வந்தது.


இதைத் தொடர்ந்து, இந்த வசதியைப்பெற பலரும் எதிர்பார்த்து வந்தனர். இந்நிலையில், Android Phone வைத்திருப்போர் அனைவரும் பயன்படுத்தும் விதத்தில், அனைவரும் இலவசமாகப் பயன்படுத்தலம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

WHATSAPP இன் புதிய பதிவினைப் பதிவிறக்கம் செய்த பின்னர், Voice Call இனை தரவிறக்கம் செய்து மற்றொரு நபர் மூலமாக உங்களுக்கு call செய்யச் சொன்னால் பேசும் வசதியைப் பெற்றுவிடலாம். இதில் பேச முற்படும் இரு தரப்பினரிடமும் இந்த நிரலி இருக்கவேண்டும் அப்போதுதான் பேசமுடியும்.

முகப்புத்தக நிறுவனம் சமீபத்தில் 1,900 கோடி அமெரிக்கா டொலருக்கு WHATSAPP நிறுவனத்தை வாங்கியது. இதைத் தொடர்ந்து இத்தகைய அறிவிப்பை WHATSAPP அறிவித்துள்ளது.

இந்தியாவில் 70 மில்லியனுக்கு மேற்பட்டவர்கள் WHATSAPP தகவல்களை அனுப்பும் வசதியைப் பயன்படுத்துகின்றனர். இது மொத்த WHATSAPP இன் பயனாளிகளில் 10 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நிரலியை கூகுள் Play Store மற்றும் WHATSAPP தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் என்றும், ஏற்கனவே WHATSAPP பேசும் வசதியை பயன்படுத்தி வரும் ஒருவர், உங்களுக்கு call செய்வதன் மூலம் இந்த புதிய வசதியை நீங்களும் பயன்படுத்தத் தொடங்கலாம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.




# Windows 10 தரும் புதிய வசதிகள்

மைக்ரோசொப்ட் தனது அடுத்த "Windows" இயங்குதள உருவாக்கத்தில் மிகத்தீவிரமாக ஈடு பட்டுள்ளது. Windows-7, Windows 8/8.1 இனைத் தொடர்ந்து, அடுத்த Windows பதிப்பின் பெயர் "Windows 10".(ஏன் Windows 9 இல்லை எனத் தெரிய வில்லை) இந்த வருட இறுதியில் வெளியாக இருக்கும் Windows 10 இனது முன்னோட்டம் ஏற்கனவே வெளியிடப் பட்டுவிட்டது. இதில் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள 5 அம்சங் களைப் பார்ப்போம் இப்போது...


**மீண்டும் START பொத்தான்:**

Windows 10ல் Start மெனு




இதில் என்ன சிறப்பு? 1995-இல் Windows 95 அறிமுகப்படுத்தப்பட்ட "Start" பொத்தான், Windows 8 இல் நீக்கப்பட்டது. இது பெரும் விமர்சனத்திற்குள்ளானது. மீண்டும் இப்போது Windows 10 இல் மேம்படுத் தப்பட்டு அறிமுகமாகியுள்ளது Start பொத்தான். புதிய Start பொத்தான் Windows 7 இல் உள்ளது போல் அமைக்கப்பட்டுள்ளது. இதன் அளவை மாற்றமுடியும், Live tiles, Bing தேடல் போன்ற நவீன வசதிகளும் இதில் கிடைக்கும்.

**உங்கள் உதவியாளர் - CORTANA:**





WINDOWS 10 இல் கோர்டானா

உங்கள் கையில் இருக்கும் ஸ்மார்ட்போன்கள் நீங்கள் சொல்வதை எல்லாம் கேட்கும். அப்படியிருக்க, உங்கள் கணினி கேட்க வேண்டாமா? அதற்காக தான் "கோர்டானா (Cortana)" நீங்கள் சொல்லுவதையெல்லாம் கட்டளைகளாக ஏற்று செய்யக்கூடியது. இது முதலில் WINDOWS செல்பேசியில் அறிமுகம் செய்யப்பட்டது. இப்போது நம் கணினிகளுக்கும் கிடைக்கிறது.

**பல DESKTOP கள்:**

ஒரே நேரத்தில் கணினியில் பல மென்பொருட் களை இயக்கி பல வேலைகளை செய்பவர்களின் Desktop மிகவும் சிக்கலாக இருக்கும். இந்தச் சிக்கலை தீர்க்க Windows 10 இல் நீங்கள் பல Desktop களைத் திறந்து பல வேலைகளை எளிதில் செய்யமுடியும்.




இப்படத்தில் மொத்தம் ஐந்து Desktopகள், ஒவ்வொன்றிலும் பல விண்டோக்கள் திறந்து இருக்கும். உதாரணமாக, நீங்கள் ஒரே நேரத்தில் இணையத்தில் பதிவிறக்கம் செய்துகொண்டு இருக்கிறீர்கள், ஒரு பெரிய கோப்பினை இடமாற்றம் செய்து கொண்டிருகிறீர்கள், அதேசமயத்தில் ஏதோ ஒரு பழைய கோப்பினை தேடிக் கொண்டிருக்கிறீர்கள் என்றால் உங்கள் திரையில் பற்பல விண்டோக்கள் உங்களை குழப்பி வேலை யைத்தாமதப்படுத்தும்.இதுபோல பளுவான வேலை களைச் செய்வோர் பல திரைகளை (Moniter) உபயோகிப்பார்கள். ஆனால் Windows 10 ல் அதே திரையில் ஒரு புதிய Desktop ஐ உருவாக்கி, ஒவ்வொரு Desktop பிலும் ஒவ்வொரு வேலைக்காக நீங்கள் பிரித்து உபயோகப்படுத்தலாம். ஒரு Desktop இல் இருந்து இன்னொரு Desktop இற்கு மாறினாலும் மற்ற Desktop இல் உள்ள எல்லா மென்பொருட்களும் இயங்கிக்கொண்டுதான் இருக்கும். இதனால் உங்கள் வேலைகள் தடைப்படாது.

முன்னதாக அப்பிளின் மக் இயங்குதளம் மற்றும், லினக்ஸ் இயங்குதளத்தில் மட்டும் கிடைத்த இந்த வசதி இப்போது Windows இற்கும் வந்துள்ளது.

## ஒரே ஒரு WINDOWS பல்வகை சாதனங்கள்:


ஒரே WINDOWS 10 இயங்குதளம் ஸ்மார்ட்போன், மடிக்கணினிகள், Xbox, TV எனச் சகல மின்னணு சாதனங்களுக்கும் ஏற்றவகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இனி கணினிகளுக்கு ஒரு இயங்குதளம், செல்பேசிகளுக்கு வேறு இயங்குதளம் என வேற்று மைகள் இருக்காது.




## அனைத்திற்கும் ஒரே WINDOWS 10 !

மேலும் கணினிகளுக்கான Windows Store உம், Phone Store உம் ஒன்றாக்கப்பட்டுள்ளது. இதில் மிக அருமையான சிறப்பம்சம் என்னவென்றால், Windows 10 க்கு நீங்கள் ஒரு மென்பொருள் எழுதினால், அது சிறிய Phone முதல் TV வரை அனைத்திலும் இயங்கும்.இந்த யுக்திக்கு "Universal Apps" என மைக்ரோ சொப்ட் பெயரிட்டுள்ளது. இதன்மூலம் Apple Store, Google Play Store ஐ காட்டிலும் Windows Store அதிக மென் பொருட்களைப் பெறும்.

## இலவசம்:




ஆமாம்! மைக்ரோசொப்டின் வரலாற்றில் முதன் முதலாக இலவச "Windows". Windows 7 மற்றும் Windows 8/8.1 பயன்படுத்துபவர்கள் Windows 10 வெளியாகி முதல் வருடத்தில் இலவசமாக மேம்படுத்திக் கொள்ளலாம். மேலும் மைக்ரோசொப்ட் "Windowsஐ நாங்கள் "சேவையாக" பார்க்கிறோம் (Software as a service)" எனக் கூறியுள்ளது.


சென்ற முறை Microsoft Office மென்பொருளை 'சேவையாக' பார்த்தபோது "Office 365" என்ற புதிய தொகுப்பு வெளியானது. இதை உபயோகிக்க நீங்கள் வருடா வருடம் மைக்ரோசொப்டிற்கு சந்தா செலுத்த வேண்டும். இப்படி பல பொறிகளை Windows 10இல் மைக்ரோசொப்ட் வைத்துள்ளது. இன்னும் இத் தொகுப்பின் விலை அறிவிக்கப்படவில்லை. பார்ப்போம் பொறுத்திருந்து.

## Windows 10 தொழில்நுட்ப முன்னோட்டம் (Technical preview)

இணையத்தில் இருந்து பதிவிறக்கம் செய்து நிறுவிக்கொள்ள விரும்புகிறவர்கள். கீழே உள்ள தொடுப்பில் செல்லவும்.. http://windows.microsoft.com/en-in/windows/preview-iso

இத்தொழில்நுட்ப முன்னோட்டம் இன்னும் முழு மையடையாத மென்பொருள். பல பிழைகள் இருக் கலாம். அவை உங்கள் கணினியைப் பாதிக்கலாம். எனவே கவனமுடன் செயற்படவும்.

# facebook இல் காணொளிகள் தானாக PLAY ஆவதை தடுப்பது எப்படி?




Facebook தளத்தில் அண்மையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. அவற்றில் சில மாற்றங்கள் எமக்குத் தேவையற்றவையாகவும் இருக்கலாம். அப்படியான மாற்றங்களில் ஒன்றுதான், உங்களது Facebook கணக்கின் முகப்புப் பக்கத்தில் (News Feed) இல் பகிரப்படும் வீடியோ கோப்புக்கள் தானாகவே இயங்குவது.

இந்த மாற்றத்தினால் தேவையற்ற வீடியோ கோப்புக்களும் தானாக இயங்குவதனால் எமது இணையப்பாவனை அளவு அதிகரிக்கப்படுவதோடு சிலருக்குத் தொல்லையாகக் கூட இருக்கலாம்.

எனவே இந்த வசதி உங்களுக்குத் தேவையற்றது என நீங்கள் கருதினால் இதனை முடக்கிக்கொள்ளும் வசதியையும் Facebook தருகிறது.

இவ்வாறு தானாக இயங்கும் வீடியோ கோப்புக்களின் செயற்பாட்டை நிறுத்திக்கொள்ள விரும்பினால் கீழுள்ள வழிமுறையைப் பின்பற்றுக.

1. முதலில் உங்கள் Facebook கணக்கிற்குள் நுழையுங்கள்.
2. பின் கீழுள்ள இணைப்பிற்குச் செல்லுங்கள்

   https://www.facebook.com→settings →video
3. பின் Auto-Play Videos என்பதற்கு நேரே இருக்கும் Drop Down Menu இல் Off என்பதனைத் தெரிவு செய்க.
4. அவ்வளவு தான்... இனி காணொளிக் கோப்புக்கள் நீங்கள் Play செய்தால் மாத்திரமே இயங்கும்.




# HTC அறிமுகப்படுததும் டிசயர் 820s

HTC நிறுவனம் டிசயர் 820s ஸ்மார்ட்போனை அறிமுகப்படுத்தியுள்ளது. இந்த ஸ்மார்ட்போனை கடந்த நவம்பர் மாதம் அறிமுகப்படுத்தியது . இரட்டை சிம் (நனோ சிம்) கொண்டது டிசயர் 820s ஸ்மார்ட் போன். FDD பா(B)ண்டுகள் (1/3/7/8) மற்றும் TDD அலைவரிசைகளுக்கான 4G ஆதரவு (38/39/40/41) கொண்டுள்ளது. 4G LTE இணைப்பு மற்றும் மாலி T760 ஜிபீயு கொண்ட 64 பிட் 1.7புர்ண ஒக்டா கோர் மீடியாடெக் MT6752 புரோசசர் மூலம் இயக்கப்படுகிறது. இதைத் தவிர, மற்றவை டிசயர் 820 போலவே டிசயர் 820s ஸ்மார்ட்போனிலும் கிட்டத்தட்ட ஒரே மாதிரியான வசதிகளைக் கொண்டுள்ளன.

இந்த ஸ்மார்ட்போனில் ஒக்டா கோர் மீடியாடெக் SoC உடன் இணைந்து ரம் 2GB உள்ளது. HTC டிசயர் 820s ஸ்மார்ட்போனில் இரட்டை சிம் ஆதரவு கொண்ட அண்ட்ரொய்டு 4.4 கிட்கட் இயங்குகிறது. இதில் 720x1280 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.5 இன்ச் HD டிஸ்ப்ளே இடம்பெறுகிறது. டிசயர் 820 ஸ்மார்ட்போன் போல இந்த ஸ்மார்ட்போனிலும் LED ப்ளாஷ் கொண்ட 13 மெகாபிக்சல் பின்புற கமரா, மற்றும் 8 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கமரா கொண்டுள்ளது.

டிசயர 820s ஸ்மார்ட்போனில் microSD அட்டை வழியாக 128GB வரை விரிவாக்கக்கூடிய 16GB உள்ளடங்கிய சேமிப்பு வருகிறது. கைப்பேசி இணைப்பு விருப்பங்கள், Wi-Fi 802.11 b/ g/ n, FM ரேடியோ, புளுடூத் 4.0, ஜிபிஆர்எஸ்/எட்ஜ், ஜிபிஎஸ்/எ-ஜிபிஎஸ், 3ஜி, மைக்ரோ-யுஎஸ்பி, ஜிஎஸ்எம் மற்றும் 4G LTE ஆகியவை வழங்குகிறது. இந்த ஸ்மார்ட்போன் 2600mAh மின்கலத்தின் திறன் மூலம் இயக்கப்படுகிறது, மற்றும் 155 கிராம் எடையுடையது.


HTC brau; 820s ஸ்மார்ட்போன் அம்சங்கள்:

இரட்டை சிம்,
720x1280 பிக்சல்கள் தீர்மானம் கொண்ட 5.5 இன்ச் HD டிஸ்பிளே
64 பிட் 1.7புர்ண அக்டா கோர் மீடியாடெக் MT6752 புரோசசர்,
ரம் 2GB>
LED பிளாஷ் கொண்ட 13 மெகாபிக்சல் பின்புற கேமரா,
8 மெகாபிக்சல் முன் எதிர்கொள்ளும் கமரா,
microSD அட்டை வழியாக 128GB வரை விரிவாக்கக் கூடிய 16GB உள்ளடங்கிய சேமிப்பு,
Wi-Fi 802.11 b/ g/ n>
FM ரேடியோ,
புளுடூத் 4.0,
ஜிபிஆர்எஸ்/எட்ஜ்,
ஜிபிஎஸ்/எ-ஜிபிஎஸ்,
3G,
மைக்ரோ-யுஎஸ்பி,
ஜிஎஸ்எம்,
4G LTE,
அண்ட்ரொய்டு 4.4 கிட்கேட்.
2600mAh மின்கலம்,
155 கிராம் எடை.

# Photoshop இற்கு போட்டியான இலவச முன்னணி மென்பொருட்கள்

Photoshop பற்றி அறியாதவர்கள் எவருமில்லை. Photoshop professional editing தேவைகளுக்கு வெளியாகிறது. இதன் அளவு பெரிதாக இருப்பதோடு, இதன் விலை அனைவருக்கும் இது கிடைப்பதை தடை செய்கிறது. இப்போது Photoshop இற்கு போட்டியாக பல மென்பொருட்கள் இலவசமாகக் கிடைக்கின்றன. எவ்வாறாயினும் இவற்றில் பலவற்றின் வடிவமைப்பு Photoshop போல இல்லை. அத்துடன், இதன் செயற்பாடுகளும் அவ்வளவு திருப்பதியாக இல்லை. இலவசமாக கிடைக்கும் Photoshop இனை வடிவத்திலும் செய்யற்பாட்டிலும் ஒத்த முன்னணி ஐந்து மென்பொருட்களை இப்போது பார்ப்போம்.


## GIMP




Photoshop இற்கு அடுத்ததாக அனைவராலும் அறியப்பட்ட ஒன்று. ஓரளவு Photoshop இன் இடைமுகத்தைக் கொண்ட மென்பொருள். மிகப்பெரும் tools box இதில் சிறப்பானது. painting, colour correction, cloning, selection என அனைத்துக்கும் ஏற்றது.

Home Page: www.gimp.org
Price: Free
Platform: Linux, Windows, Mac


## Getpaint.net



அவ்வளவாக பிரபலம் அடையாத இதில் ஏராளமான வசதிகள் உண்டு. மிகச்சிறிய அளவில் உள்ளது இதன் மற்றுமொரு சிறப்பு. சிறப்பான selection tools, curves மூலமான கட்டுப்பாடுகள் போன்றவை photoshop இல் உள்ளதைப் போன்ற வசதிகள் ஆகும்.

Home Page: www.getpaint.net
Price: Free
Platform: Windows

## Inkscape




மேலே உள்ளவற்றை விட சிறப்பானது. Scalable Vector Graphics (SVG) முறையில் சேமிக்க உதவுதல் இதன் சிறப்பம்சம். CorelDraw வின் தன்மைகளை ஒத்தது.

Home Page: inkscape.org
Download: Cloud or Direct
Price: Free

Platform: Linux, Windows, Mac

## Gimphoto



தொழில்நுட்ப ரீதியில் ஏராளமான வசதிகளை கொண்ட இந்த மென்பொருள் சற்றுப் பழையது. இதன் update நீண்ட காலமாக வரவில்லை. Desktop color picker Enhanced text tool, Dynamic brushes போன்றவை சிறப்பானவை.

Home Page: gimphoto.com
Price: Free

Platform: Linux, Windows, Mac

### இலவச இணைய Photo Editing சேவைகள்

இணையத்திலும் Photos நனவை செய்ய ஏராள மான இலவச தளங்கள் உள்ளன. இவற்றைப் பயன் படுத்துவதால் பல நன்மைகள் உண்டு. உதாரணமாக தரவிறக்க தேவை இல்லை, பரந்துபட்ட Frame, Templates போன்ற Online resources இலவசமாகக் கிடைத்தல் போன்றவை.

1. photoshop Express
2. pixlr.com
3. www.aviary.com
4. www.splashup.com

இதை விட Picasa பொதுவாக அறியப்பட்ட இணை யத்திலும் கணினியிலும் இயங்ககூடிய கூகிள் தரும் இலவச Photo Editing சேவையாகும்.

PUBLIC LIBRARY
JAFFNA



# PENDRIVEY WRITE PROTECTED பிழையை நீக்குவது எப்படி?

இன்று நாம் பயன்படுத்தும் கணினி சார்ந்த டிவைஸ்களில் முக்கிய பங்கு வகிப்பது பென்டிரைவ் என்றால் அது மிகையாது. காரணம் இதன்மூலம் நமக்கு வேண்டிய தகவல்களை ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்தில் எளிதாக எடுத்துச்செல்ல முடியும் என்பதே.





மேலும் தற்போதுள்ள நவீன பென்டிரைவ் களில் (New Type of Pendrive) கோப்புகளின் அளவை மேலும் நீடித்து வைத்துக்கொள்ள முடியும் என்பது கூடுதல் சிறப்பு. அதாவது பென்டிரைவில் 1GB, 2GB, 4GB, 6GB, 8GB, என ஆரம்பித்து, தற்பொழுது 64GB கொள்ளவு கொண்ட பென்டிரைவ்களும் இருப்பதாகக் கேள்விப்படுகிறோம். இத்தகைய பயன்மிக்க பென்டிரைவ் (Pendrive) அல்லது மெமரி கார்ட்(memory card) போன்ற ரீமூவபிள் டிவைஸ்களை நாம் பயன்படுத்தும் பொழுது சில சமயம் cannot copy files and folder, drive is write protected. remove write protection or use another disk என்பன போன்ற பிழையான செய்திகளைக் காட்டும்.

உடனே என்னவோ ஏதோவென்று, பதறாதீர்கள், இவ்வாறான பிழைச் செய்திகளை(Error) வருவதற்கு வைரஸ் போன்ற தீங்கிழைக்கும் புரோகிராம்களே (Virus Program) காரணமாக இருக்கும். இதுபோன்ற பிழைச்செய்திகள் வருவதற்கு ஒரு முக்கிய காரணம் உங்கள் கணினியில் உள்ள Registry கோப்பில் வைரஸ்கள் 'கை' வைப்பதுதான். அதனாலேயே பெரும்பாலான பிழைச்செய்திகள் இவ்வாறு தோன்றும்.


சரி.. write protected பிழைச் செய்தி காட்டினால் என்ன செய்வது? அதற்கான தீர்வுதான் என்ன? என்கிறீர்களா?

இதோ தீர்வு உங்களுடைய கணினியில் Start பட்டன் அழுத்துங்கள். Run விண்டோவை திறவுங்கள்.

அதில்reg add "HKLM\System\CurrentcontrolSet\Control\StorageDevicePolicies/t Reg_dword /vWriteProtect /f/d 0 என கொடுத்து ok பட்டனை அழுத்துங்கள். அவ்வளவுதான். இப்பொழுது உங்களுடைய கணினியில் உள்ள பென்டிரைவை எடுத்து விட்டு மீண்டும் கணினியில் இணைத்து பணி புரியத் தொடங்கலாம். இப்பொழுது Write Protected பிழைச்செய்தி தோன்றாது.



பின்னர் கீழே படத்தில் காட்டியவாறு வெட்ட வேண்டும்




# WiFi சிக்னலின் அளவினை இலகுவாக அதிகரிக்க

வெற்று Coca-cola tin இனை பயன்படுத்தி உங்கள் இல்லங்களில் உள்ள WIFI சாதனத்தின் சமிக்கை அளவினை அதிகரித்துகொள்ள முடியும் என நம்பப் படுகிறது. இதன்மூலம் WIFI சமிக்கை அளவினை 2 முதல் 4 புள்ளிகள் வரை உயர்த்தமுடியும்.

**வெற்று Coca-cola Itin இனை எவ்வாறு பயன்படுத்துவது?**




தேவையான பொருட்கள்


ஒரு வெற்று Coca-cola tin

கத்தரிக்கோல்


கத்தி


Blu tack gum or any thing..

முதலில் வெற்று Coca-cola tin இனை நன்றாகக் கழுவியபின் tin இன் மூடியை அகற்றவேண்டும்



கீழே உள்ள படத்தில் காட்டியவாறு வெள்ளை புள்ளி கோட்டுப் பகுதியை வெட்டுதல் ஆகாது.




இப்போது நீங்கள் வெட்டிய Coca-cola tin இனை கீழே படத்தில் காட்டியவாறு பொருத்துக . உங்கள் WIFI சிக்னலின் அளவு அதிகரிக்கும்.



# கணினியில் தமிழ் எழுதலாம் வாங்க


NHM Writer வைத்து எவ்வாறு கணினியில் தமிழில் தட்டச்சு செய்வது? என்பதை இக்கட்டுரையில் பார்ப்போம்.

1. NHM Writer மென்பொருள் Assamese, Bengali, Gujarati, hindi, Kannadam, Malayalam, Marathi, Punjabi, Tamil & Telugu என 10க்கும் மேற்பட்ட ஆங்கிலம் அல்லாத மொழிகளில் தட்டச்சு செய்ய வகை செய்கின்றது.
2. மேலும் Google Chrome, Firefox, Safari, Internet Explorer, Opera, என பலவிதமான உலாவிகளில் எளிதாக தட்டச்சு செய்ய உதவி புரிகின்றது.
3. இவை மட்டும் அல்லாமல் Window Live Writer, Outlook, Notepad, MS-Word, MS-Excel, MS-Powerpoint என MS-Office மென்பொருள்களுடன் சேர்ந்து எளிதாக வேலை செய்கின்றது.
4. வின்டோஸ் XP/2003/Vista/7/8 என அனைத்து இயங்குதளங்களிலும் இந்த மென்பொருளை நிறுவ முடியும்.
5. தமிழ் தட்டச்சு தெரிந்தவர்கள்/தெரியாதவர்கள் கூட NHM Writer மென்பொருள் மூலம் எளிதாக தட்டச்சு செய்யமுடியும்.
6. ஆங்கிலத்தில் 'amma' என்று தட்டச்சு செய்தால் அதை திரையில் அம்மா என்று தமிழில் பார்க்கும் வசதி.
7. ஒன்றுக்கும் மேற்பட்ட தமிழ் தட்டச்சு விசைப்பலகை முறையினைப் பயன்படுத்த முடியும்.
8. இந்த மென்பொருளை நிறுவ வின்டோஸ் இயங்கு தளத்தின் CD தேவையில்லை.

**NHM Writer எவ்வாறு பதிவிறக்கம் செய்து இன்ஸ் டால் செய்வது எப்படி?**

NHM Writer என்ற மென்பொருளை கீழ் உள்ள இணை யத்தளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்யவும். http://software.nhm.in/products/writer


**எவ்வாறு பதிவிறக்கம் செய்வது திரை விளக்கப்படம்**





உங்கள் கணினியில் பதிவிறக்கம் செய்த கோப்பை (File) நிறுவுவதற்கு (NHMWriterSetup1511.exe) என்ற கோப்புபை இரண்டு முறை சொடுக்கவும்.

பின்னர் கீழ் தரப்பட்டுள்ள வழிமுறைகளைப் பின் பற்றவும்.


முதல் படி (Step1) Next என்ற பொத்தானைச் சுட்டவும்.




2ஆம் படி (Step 2) இதில் I accept the agreement என்று தேர்வு செய்து பின்னர் Next என்ற பொத்தானைச் சொடுக்கவும்.





3ஆம் படி (Step3) Next என்ற பொத்தானைச் சொடுக்கவும்.





4ஆம் படி (Step4) இதில் தமிழ்மொழியைத் தேர்வு செய்து பின்னர் Next என்ற பொத்தானைச் சொடுக்கவும்.





5ஆம் படி (Step 5) Next என்ற பொத்தானைச் சுட்டவும்.





6ஆம் படி (Step 6) Next என்ற பொத்தானைச் சொடுக்கவும்.




பின்னர் மென்பொருள் கணினியில் நிறுவப்படும்.




### NHM Writer யை எவ்வாறு பயன்படுத்துவது?




NHM Writer பயன்படுத்த கணினியின் கீழ் பகுதியில் உள்ள Toolbar இல் வலது மூலையில் மணி போன்ற ஓர் குறியீடு (Icon) தெரிந்தால் NHM Writer தற்போது இயங்கி கொண்டுள்ளது என்று அர்த்தம். இதன்மூலம் NHM Writer ஐ நீங்கள் பயன்படுத்த முடியும்.

### தமிழ் தட்டச்சு பலகையை எவ்வாறு தேர்வு செய்வது?

நான் முன்பே கூறியது போல் நீங்கள் விரும்பும் தமிழ் தட்டச்சு பலகையைத் தேர்வுசெய்ய மேற்கூறிய மணி போன்ற ஓர் குறியீட்டில் (Icon) உங்கள் சுட்டியை வைத்து இடது (Left) பொத்தானைச் சுட்டினால், திரைவிளக்கப்படத்தில் உள்ள Menu தெரியும். அதில் நீங்கள் விரும்பிய தமிழ் தட்டச்சு பலகையை தேர்வு செய்யவும்.





தேர்வு செய்த பின்னர் நீங்கள் தமிழில் தட்டச்சு செய்ய முடியும்.

மேலும் எளிதாக தமிழில் தட்டச்சு தேர்வு, செய்ய Alt Key மற்றும் 4 என்ற என்னைச் சேர்த்து அழுத்தினால் போதும்.


தமிழ் தட்டச்சுவிலிருந்து ஆங்கிலமொழி தட்டச்சு பலகைக்கு மாற்ற, Alt Key மற்றும் 0 என்ற எண்னை சேர்த்து அழுத்தினால் போதும்.

### Settings ஐ எவ்வாறு மாற்றுவது?

NHM Writer Setting மாற்ற மேற்கூறிய மணி போன்ற ஓர் குறியீட்டில் (Icon) உங்கள் சுட்டியை வைத்து வலது (Right) பொத்தானைச் சுட்டினால் திரை விளக் கப்படத்தில் உள்ள Menu தெரியும்.





அதில் setting என்ற Menu ஐ சுட்டவும். பின்னர் கீழ் உள்ள திரைவிளக்கப்படம் தெரியும். அதில் நீங்கள் உங்கள் தட்டச்சு பலகைக்கு மாற்ற உதவும் Alt Key மற்றும் எண்னை மாற்ற விரும்பினால் மாற்றிக்கொள்ளலாம்.




### தமிழ் தட்டச்சு பலகையை எவ்வாறு அறிந்து கொள்வது?

முதன் முதலில் தமிழில் தட்டச்சு செய்ய எந்தெந்த தமிழ் எழுத்து, தட்டச்சு பலகையில் எந்தெந்த பொத்தானில் உள்ளது? என்பதை அறிவது அவசியம்.

ஆகவே தான் உங்களுக்கு உதவியாக நீங்கள் தட்டச்சு செய்யும் போது உங்கள் கண் முன் அந்த தட்டச்சு பலகையின் விளக்கப்படம் கொண்டுவர NHM Writer உதவி புரிகின்றது. அதற்கு நீங்கள், மேற்கூறிய மணி போன்ற குறியீட்டை (Icon) உங்கள் சுட்டியின் வலது (Right) பொத்தானைக் சுட்டினால் போதும். திரைவிளக்கப்படத்தில் உள்ள MENU தெரியும்.



அதில் On-Screen Keyboard என்ற MENU ஐக் சுட்டவும். பின்னர் கீழ் உள்ள திரைவிளக்கப்படம் உங்கள் திரையில் தெரிந்து கொண்டே இருக்கும்.





நீங்கள் இதை வைத்து தட்டச்சு செய்யும் எழுத்து எங்கு உள்ளது என்பதை எளிதில் பார்த்து தட்டச்சு செய்ய முடியும்.


ah>a;>a+>ap>aP போன்ற எழுத்துக்களை எவ்வாறு தட்டச்சு செய்வது?

எனக்கு தெரிந்தவரை தமிழில் தட்டச்சு செய்பவர்கள் ஆரம்பத்தில் பிரச்சினையாக கருதுவது மேற்குறிப்பிட்ட தமிழ் எழுத்துக்களைதான். அவற்றை தட்டச்சு செய்ய NHM Writer, Key Preview என்ற எளிய வழியை ஏற்படுத்தி உள்ளது.

Key Preview என்ற திரையை பார்க்க மேற்கூறிய மணி போன்ற குறியீட்டை (Icon) உங்கள் சுட்டியின் வலது (Right) பொத்தானை சுட்டினால் திரைவிளக்கப்படத்தில் உள்ள MENU தெரியும்.




அதில் Key Preview என்ற MENU ஐ சுட்டவும். பின்னர் கீழ் உள்ள திரைவிளக்கப்படம் உங்கள் திரையில் தெரிந்து கொண்டே இருக்கும்




உதாரணமாக நீங்கள் a என்ற ஆங்கில எழுத்தை தட்டச்சு செய்தால் அதற்கு "ய" என்ற தமிழ் எழுத்து உங்கள் திரையில் விழும். நீங்கள் அந்த "ய" என்ற தமிழ் எழுத்தை "ய்" என்றோ, அல்லது "யா" என்றோ மாற்ற விரும்பினால் "a" அல்லது ah என்று தட்டச்சு செய்யவேண்டும். உங்களுக்கு உதவியாக கீழ் உள்ள திரைவிளக்கப்படம் உங்கள் திரையில் தெரிந்து கொண்டே இருக்கும்.




நீங்கள் இதைப்பார்த்து, எந்த ஆங்கில எழுத்தை தட்டச்சு செய்தால் என்ன தமிழ் எழுத்து வரும் என்பதை நன்றாக அறிந்து செய்ய முடியும்.

இனி உங்கள் தமிழ் தட்டச்சு, தமிழை போலவே இனிதாக இருக்கும்! வளர்க இனிய தமிழ் மற்றும் இணைய தமிழ்!!!

# Gmail Peeper.

தற்போதைய உலகில் Gmail மின்னஞ்சல் பயன்படுத்துபவர்களே அதிகம். இதற்கு Google அளிக்கும் வசதிகள் தான் முக்கிய காரணமாகும். ஜிமெயிலில் புதிதாக ஏதேனும் மின்னஞ்சல் வந்தால் அதனை உடனே அறியத்தருவதற்காக ஒரு மென்பொருள் உள்ளது. இதன் பெயர் Gmail Peeper.

இந்த மென்பொருளை தரவிறக்கம் செய்ததும் கணினியில் நிறுவிக் கொள்ளவும். பின் ஒரு Window open ஆகும். இதில் உள்ள Settings என்பதில் ஜிமெயில் முகவரியையும், கடவுச்சொல்லையும் உள்ளிட்டவும். அதன்பின் எவ்வளவு நிமிடத்திற்கு ஒருமுறை நமக்கு தகவல் வரவேண்டும் என்பதை set செய்திடவும். மின்னஞ்சல் வரும் போது Sound Alert வருமாறும் set செய்யலாம்.

தற்போது புதிதாக ஏதேனும் மின்னஞ்சல் வந்தால் Task Bar-இல் Indication தோன்றும். அதை click செய்தால் தோன்றும் Window-இல் அந்த மின்னஞ்சல் எங்கிருந்து வந்துள்ளது, அதன் தலைப்பு என்ன என்பதை அறிந்து கொள்ளலாம்.

# செல்லினம்

## அன்ராய்டு செல்பேசி தமிழ் எழுதி


நண்பர்களே, கணினியில் தமிழில் எழுத பல மென்பொருள்கள் உள்ளன. உதாரணமாக Google Indic, NHM Writter என்ற சிறந்த மென்பொருள்கள் பலரால் தமிழில் எழுத பயன்படுகிறது. ஆனால் செல்பேசிகளில் தமிழ் எழுத பல மென்பொருள்கள் இணையத்தில் கிடைத்தாலும் எந்த மென்பொருளும் அவ்வளவு சிறப்பானதாக இல்லை எனலாம். முக்கிய மாக அன்ரோய்டு செல்பேசிகள் தற்போது பலரால் பயன்படுத்தபட்டு வருகிறது. அன்ரோய்டு செல்பேசி களுக்கென சிறப்பான தமிழ் எழுதி இதுவரை இல்லை எனலாம். இந்தக் குறையைத் தீர்க்க வந்துள்ளது செல் லினம் என்ற இந்த மென்பொருள்.

ஏற்கனவே iPhone களுக்கு மட்டுமே செயலாற்றிய இந்த மென்பொருள் தற்போது அன்ரோய்டு செல்பேசி களுக்கும் வந்துள்ளது. இதுவரை உள்ள தமிழ் எழுதி களை விட சிறப்பாகவும், எளிதாகவும் உள்ளது. மேலும் முக்கிய வசதியாக தமிழ் வார்த்தை பரிந்துரைகளும் காட்டுகிறது.

இந்த மென்பொருள் தமிழில் எழுத இருவகையான விசைபலகை முறைகளைத் தருகிறது.

1. தமிழ் 99
2. முரசு அஞ்சல்

முதலில் தமிழ் 99 மூலமாக எவ்வாறு எழுதுவது எனப் பார்ப்போம். இதில் தமிழ் என எழுத த, ம+இ=மி, ழ+புள்ளி=ழ் என எழுத வேண்டும். மேலும் செல்லினம் என்பதை ச+எ=செ,ல+புள்ளி=ல்,ல+இ=லி,ன,ம+புள்ளி என எழுதவேண்டும். மேலும் விபரங்களுக்கு Tamil99 keyboard எனகூகுளில் தேடினால் பெற்றுக்கொள்ளலாம்.



இரண்டாவது முறையான முரசு அஞ்சல் மிகவும் எளிது. தங்லிஷ் முறையில் டைப் செய்தால் போதும். உதாரணம் ammaa→அம்மா. சில எழுத்துகளை மட்டும் உதாரணமாக ன,ந எழுதும் போதுமட்டும் எதுவென தேர்வு செய்ய வேண்டும்.

இந்த மென்பொருள் பற்றி மேலும் அறிய இதன் அதிகாரபூர்வ இணையத்தளமான http://sellinam.com/ செல்லுங்கள். இதனை Google Play Store ன் ஊடாக தர விறக்கம் செய்து கொள்ளலாம்.




# உலகைச் சுற்றி வரும் சூரிய விமானம்



சூரிய ஒளியைக் கொண்டு மின் சாரம் தயாரிக் கலாம். அந்த மின் சாரத்தைக் கொண்டு இயந்திரங் களை இயக்கலாம். இயந்திரங்கள் மூலம் விமானத்தின் சுழலி களை, இயக்கலாம். சூரிய விமானம் தயார்.

இப்படியாக உருவாக்கப்பட்ட ஒரு விமானம் உலகைச் சுற்றி வருவதற்காகக் கிளம்பியிருக்கிறது. சூரிய ஒளியால் மட்டுமே இயங்குவதால் இந்த விமானத்தின் பெயர் சோலார் இம்பல்ஸ் (Solar Impulse ). கடந்த மாதம் ஒன்பதாம் தேதி (March 9 ) அபுதாபியிலிருந்து கிளம்பிய அந்த விமானம் ஓமான் வழியாக இந்தியாவின் ஆமதாபாத்தில் வந்து இறங்கியது. அடுத்து வாரணாசி. அரபுக் கடல் மேலாக சோலார் இம்பல்ஸ் விமானம் பின்னர் இந்தியாவிலிருந்து புறப்பட்டு மியான்மார். அடுத்து சீனா. பிறகு பசுபிக் கடலைக் கடந்து வட அமெரிக்கா. அமெரிக்கக் கண்டம் மீதாகப் பறந்து முடித்த பின் அட்லாண்டிக்கைக் கடந்தாக வேண்டும். பிறகு ஐரோப்பா அல்லது வட ஆபிரிக்கா வழியே பழையபடி அபுதாபி வந்து சேர்ந்தாக வேண்டும். மொத்தம் 35 ஆயிரம் கிலோ மீட்டர் பறக்க வேண்டும்.


பலநூறு பயணிகளுடன் நாடுகளுக்கு இடையே பறக்கும் விமானங்கள் உயர்ரக எரிபொருளை பயன்படுத்துகின்றன. சோலார் இம்பல்ஸ் விமானத்துக்கு இவ்விதமான எரிபொருள் தேவையே இல்லை. அந்த வகை யில் இது அபூர்வமான விமானமாகும்.

சூரிய ஒளியை மின்சாரமாக மாற்றுவதற்கென விமானத் தின் இரு இறக்கைகளிலும் 17 ஆயிரம் சூரியகலங்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆகவே இதன் இறக்கைகள் மிகவும் நீளமானவை (72 மீட்டர்). இவ்வளவு சூரிய கலங்கள் இருந்தாலும் இந்த விமானத்தில் இரண்டு பேருக்கு மேல் ஏறிச் செல்ல முடியாது. அதன் திறன் அவ்வளவு தான்.

சோலார் இம்பல்ஸ் பறந்து செல்லும் பாதை சோலார் இம்பல்ஸ் விமானம் பொதுவில் மணிக்கு 90 கிலோ மீட்டர் வேகத்தில் பறக்கக்கூடியதாகும். பகலில் சூரிய ஒளி மூலம் கிடைக்கும் மின்சாரம் விமானத்தில் உள்ள பாட்டரிகளில் சேமிக்கப்படும் என்பதால் இரவிலும் இந்த விமானத்தை ஓட்டிச்செல்ல முடியும்.

PUBLIC LIBRARY
JAFFNA






ஆண்ட்ரே போர்ஷ்பெக், பெர்ட்ராண்ட் பிக்கார்ட் ஆகிய இருவரும் தான் மாறி மாறி விமானத்தை ஓட்டிச் செல்வர். வேகம் குறைவு என்பதாலும் வழியில் ஆங்காங்கு தங்கிச் செல்வதாலும் உலகைச் சுற்றி வர அவர்களுக்கு ஐந்து மாதம் ஆகும். வானில் பறக்கின்ற நேரத்தை மட்டும் கணக்கிட்டால் 25 நாட்கள் பறக்க வேண்டியிருக்கும்.

உலக சாதனை படைக்கும் ஆண்ட்ரே போர்ஷ்பெக், பெர்ட்ராண்ட் பிக்கார்ட் பசுபிக் கடலைக் கடப்பது தான் பெரிய சவாலாகும். வழியில் எங்கும் இறங்க இயலாது என்பதால் தொடர்ந்து ஐந்து நாட்கள் பறந்தாக வேண்டும். பின்னர் அட்லாண்டிக் கடலைக் கடப்பது இன்னொரு சவாலாகும்.

கடலைக் கடக்கும் போது விமானத்தில் கோளாறு ஏற்படுமானால் கடலில் குதித்து உயிர் தப்புவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

போர்ஷ்பெக்கும் பிக்கார்டும் சேர்ந்து தான் இந்த விமானத்தை உருவாக்கியுள்ளனர். இவர்களில் பிக்கார்டின் தந்தை ஜாக்கஸ் பிக்கார்ட் 1960 ஆம் ஆண்டில் வால்ஷ் என்பவருடன் சேர்ந்து நீர்மூழ்கிக்கலம் மூலம் உலகின் கடல்களில் மிக ஆழமான இடத்துக்குச் சென்று சாதனை படைத்தவர்.



பிக்கார்டின் பாட்டனார் ஆகஸ்டே பிக்கார்ட் 1931 வானில் மிக உயரத்துக்குச் சென்று சாதனை படைத்தவர். பேரன் பிக்கார்ட் புதிய வகையில் சாதனை நிகழ்த்த முற்பட்டுள்ளதில் வியப்பில்லை.

சூரிய ஒளியால் விமானத்தை ஓட்ட முடியும் என்றால் எதிர்காலத்தில் வெளிநாடுகளுக்குச் செல்ல பயணிகள் இத்தகைய விமானத்தில் செல்ல வழி பிறக்குமா என்ற கேள்வி எழும். இக்கட்டத்தில் இது பற்றி எதுவும் சொல்ல இயலாது.

சொல்லப் போனால் அமெரிக்காவில் ரைட் சகோதரர்கள் கடந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் விமானத்தை உருவாக்கியதற்குப் பல ஆண்டுகள் கழித்துத் தான் முதலாவது பயணி விமானத்தில் ஏறிச் சென்றார்.

சோலார் இம்பல்ஸ் விமானத்தின் முயற்சியானது ஒரு துணிகர பரிசோதனை. இப்போதைக்கு அது அவ்வளவு தான்.

ஆள் யாரும் இல்லாமல் சூரிய ஒளி மூலம் வானில் தொடர்ந்து ஆறு மாத காலம் பறந்து கொண்டிருக்கக் கூடிய விமானத்தை உருவாக்குவது தங்களது எதிர் காலத் திட்டம் என்று போர்ஷ்பேக்கும் பிக்கார்டும் கூறியுள்ளனர்.

அவ்வித விமானம் தகவல் போக்குவரத்து, வானிலை, தேடுதல் பணி போன்று பல பணிகளுக்கு உதவியாக இருக்கலாம்.


இன்றைய கணினி யுகத்தில் Programming மற்றும் Web designing துறைகள் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்துவிட்டது. கணினி பற்றிய கற்றல்களில் உள்ளடங்கிய வலைத்தள வடிவமைப்பிற்கு, HTML என்பது அடிப்படை ஆதாரம் ஆகும்.

இவ்வடிப்படையைக் (HTML) கற்றுக்கொண்டால் இத்துறையில் பல்வேறு தருணங்களில், பல்வேறு இடங்களில் இது பயன்படும்.

HTML கற்றுக்கொள்ள விரும்புபவர்கள் மைக்ரோசாப்டின் Note Pad பயன்பாட்டையே பயன்படுத்துகிறார்கள்.

சுட்டிக்காட்டும் வசதி உள்ளது. அதாவது ஒரு HTML குறியீட்டை ஆரம்பித்ததிலிருந்து முடிக்கும் வரை, சரியாக அவற்றை நிறைவுசெய்த பிறகே அது முழுமையடையும். அதன்மூலம் தவறாக நாம் உள்ளீடு செய்தாலும் அவற்றை எளிதாகக் கண்டறியலாம்.

மற்றுமொரு வசதி ஏதாவது ஒருகுறிபபிட்ட சொல்லை நாம் தேர்வு செய்யும்போது அவற்றைப் போன்று ஒத்திருக்கும் சொற்களனைத்தும் Hilight செய்து காண்பிக்கும். கூடுதலாக மேம்படுத்தப்பட்ட தேடல் வசதி, பயன்படுத்திக் கொண்டிருக்கும் கோப்புகளனைத்தையும் தனித்தனி Tab களில் காட்டப்படும்




ஆனால் இதைவிட கூடுதல் வசதிகளை உள்ளடக்கியுள்ளது Notepad++.

Note Pad மூலம் நாம் எழுதும் HTML Tags ஆனது சிலசமயங்களில் முழுமை பெற்றிருக்காது. இவற்றைக் கவனிக்காமலேயே நாம் அக்கோப்பை சேமித்து, உலவியில் திறந்து பார்க்கும்போது, எதிர்பார்த்த வெளிப்பாட்டைப் பெறமுடியாது. ஏதேனும் ஒரு இடத்தில் குறியீடுகளை முழுமையாக முடிக்காமல் விட்டிருந்தாலும், அவற்றை நாமாகத்தான் கண்டறிந்து திருத்தம் செய்துமுடிக்க வேண்டும்.

ஆனால் Notepad++ இல் நாம் உள்ளிட்ட HTML Tag களில் ஏதேனும் முடிக்கபடாமலிருந்தால் அவற்றைச்

வசதி ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

அத்தோடு மட்டுமல்லாமல் கணினி மொழிகளான C, C++, C#, Java,PHP, XML, Java Script VB போன்ற பல்வேறு நிகழ்ச்சி நிரல்களையும் எழுதி கையாள முடிகிறது.

இத்தனை வசதிகளையும் உள்ளடக்கிய NotePad ++ முற்றிலும் ஒரு இலவச பயன்பாடு என்பது கூடுதல் சிறப்புச்செய்தி. இம்மென்பொருளைத் தரவிறக்கம் செய்து பயன்படுத்திப் பாருங்கள்...! நிச்சயம் பயனுள்ளதாக இருக்கும்.

தரைவிறக்கச் சுட்டி : http://notepad-plus-plus.org/download/v6.7.4.html

# Dropbox பயனாளர்களே உசார்!

தொழில்நுட்பம் வளர்ந்துள்ள அளவுக்கு இணைய குற்றங்களும் (Cyber Crimes) வளர்ந்திருக்கிறது என்பதை நம் யாராலும் மறுத்துவிட முடியாது. சமீபகாலமாக இணையகுற்றங்கள் அதிகமாக நடந்து வருகின்றன. அண்மைக் காலமாக இணையத் திருடர்களின் கவனத்தை ஈர்த்திருக்கிறது 'Dropbox' எனப்படும் கோப்புச் சேமிப்பு வலைத்தளம்.

இது கோப்புக்களைச் சேமிப்பதற்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. இந்த வலைத் தளத்தில் ஒருவரின் தனிப்பட்ட புகைப்படங்களை சேமித்து வைத்துக் கொள்ள முடியும். கூகுளின் ஜிமெயில் கணக்கை போல பயனாளர் பெயர் மற்றும் கடவுச்சொல் கொண்டு இந்த வலைத்தளத்தில் புது கணக்கை தொடங்கலாம். அந்தக் கணக்கில் புகைப் படங்களை பதிவேற்றம் செய்து வைத்துக்கொண்டு தேவை என்கிற போது அதை தரவிறக்கமும் செய்து கொள்ளலாம்.

### அச்சத்தில் பயனாளர்கள் !

சரி, நல்ல விஷயம்தான். இதிலென்ன ஆபத்து வந்துவிடப் போகிறது என்கிறீர்களா? சில வாரங்களுக்கு முன்பு போஸ்ட்பின் என்கிற வலைத்தளத்தில் அடையாளம் தெரியாத ஒரு நபர் 400 'Drpbox' கணக்கர்களின் பயனாளர் எண் மற்றும் கடவுச்சொல் விவரங்களை வெளியிட்டுள்ளார். மேலும் அவர் தான் 'Dropbox' இனது சேவை வழங்கியை கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும், தன்னிடம் தற்போது சுமார் 7 மில்லியன் 'DROPBOX' கணக்காளர்களின் பயனாளர் பெயர் மற்றும் கடவுச்சொல் இருப்பதாகவும், அதற்குத் தகுந்த பணத்தை யார் வழங்க முன் வருகிறார்களோ அவர்களுக்கு 'DROPBOX' கணக்குகள் குறித்த விவரங்களை வழங்கத்தயார் எனவும் தெரிவித்திருக்கிறார்.

இது DROPBOX பயனாளர்கள் எலோரையும் அச்சத்தில் உறைய வைத்திருக்கிறது.

### போலி நிரலிகளே காரணம்!

இது குறித்து DROPBOX தரப்பு, "facebook> whatsapp போல DROPBOX உம் பல்வேறு மூன்றாந்தர நிரலியாக Play Store இல் இருக்கின்றன. இந்த போலி நிரலிகளைப் பயன்படுத்தியே இணையத்திருடர்கள் DROPBOX விவரங்களை திருடி இருக்கலாம். மற்றபடி Dropbox சேவை வழங்கி எதுவும் திருடப்படவில்லை. அதுமட்டுமல்லாமல், முன்னனெச்சரிக்கை நடவடிக்கையாக DROPBOX பயனாளர்கள் எல்லோருக்கும் அவரவர்களின் கடவுச்சொற்களை மாற்றச் சொல்லி மின்னஞ்சல் அனுப்பப்பட்டு விட்டது" என்று தெரிவித்துள்ளது.

### எச்சரிகையாக இருங்கள்!

இன்றைய நிலையில் Android போன்களின் ஆதிக்கம்தான் உலகம் முழுவதும் நடைபெற்று வருகிறது. Dropbox> Facebook தொடங்கி சமூக வலைத்தளத்தின் இன்றைய ஜாம்பவான் Whatsapp வரை போலியான நிரலிகள் உருவாக்கப்பட்டு உலாவி வருகின்றன. அதனால் நிரலிகளை தரவிறக்கம் செய்யும்போது மிகவும் கவனமுடன் செயற்படுவது அவசியம். முடிந்தவரை நிரலிகளை அதன் அதிகார பூர்வமான தளங்களிலிருந்து தரவிறக்கம் செய்யுங்கள்.


ATM இன் PIN இலக்கத்தை அடிக்கடி மாற்றுவது போல, முக்கியமான, நமது விவரங்கள் அதிகம் இருக்கக்கூடிய வலைத்தளங்களின் கடவுச்சொற்களை கூட அடிக்கடி மாற்றிக்கொள்வது நல்லது. நாம் எச்சரிக்கையுடன் இல்லாமல் போனால் சமூக வலைத்தளங்கள், இதுபோன்ற தகவல் சேமிப்பு வலைத்தளங்கள் மற்றும் வங்கி கணக்குகள் என எல்லாவற்றிலும் உண்மையானது போலவே வலைத் தளங்களை உருவாக்கி கூட நமது விவரங்களை இணையத்திருடர்கள் திருடிவிடக்கூடும்

# தொலைந்துபோன கையடக்க தொலைபேசியைக் கண்டுபிடிப்பது மற்றும் உளவு பார்ப்பது எப்படி?




இன்றைய நவீன யுகத்தில் பெரும்பாலானவர்கள் பாவிப்பது விலை உயர்ந்த ஸ்மார்ட் போன்கள். அதிலும் தற்போது முன்னிலையில் இருப்பது சாம்சுங் ஆகும். இந்த சாம்சுங் கையடக்கத் தொலைபேசி தொலைந்து போகும்போது உங்கள் மனம் மிகுந்த வருத்தப்படும். அத்தோடு சேர்த்து உங்கள் பெறுமதி வாய்ந்த தகவல் களும் தொலைந்து போவதைப் பற்றி கற்பனை செய்து பார்த்ததுண்டா? இதற்கு ஒரே வழி வருமுன் காப்பதே ஆகும். இந்த கட்டுரையின் மூலம் உங்கள் சாம்சுங் கையடக்கத் தொலைபேசி தொலைந்து போனால் அதை எவ்வாறு கண்டுபிடிப்பது அல்லது அதை தொலைவில் இருந்து செயற்படுத்துவது என்று பார்க்கலாம்.

இதற்கு உங்கள் கையடக்கத் தொலைபேசி ஒரு Android ஸ்மார்ட் போனாக இருக்கவேண்டும். முதலில் உங்கள் புதிய அல்லது பாவனை செய்கின்ற தொலைபேசியை எதிர்கால நன்மைகருதி முன்னேற் பாடாகத் தயார்படுத்த வேண்டும். அதற்குப் பின்வரும் படி முறைகளைச் செய்து கொள்ளவும்.





01. Settings, Location & Settings, அங்கே Remote Controls என்பதில் Tick செய்யவும்.

02. அப்போது உங்கள் Samsung Account User name & Password என்பவற்றை உட்செலுத்த கேட்கும். ஏற்கனவே உங்களுக்கு Samsung user கணக்கு இல்லை எனில் புதிதாக ஒன்றை ஆரம்பிக்கவும்.

03. இப்போது விதிமுறைகள் (Conditions Agreement) பற்றிய பக்கம் காண்பிக்கப்படும். அதில் I agree





என்பதைச் சொடுக்கவும். அவ்வளவுதான் இப்போது உங்கள் கையடக்கத் தொலைபேசி தயாராகிவிட்டது. இப்போது உங்கள் தொலைபேசி தொலைந்தாலோ அல்லது உங்களது தொலைபேசியை வேறு யாராவது பாவித்ததாலோ அது இருக்கும் இடம், பயணம் செய்த பாதை, அதன் அழைப்பு விபர பட்டியல் (Call logs) மற்றும் ஏராளமான விடயங்களை Track செய்ய முடியும்.


http://findmymobile.samsung.com/login.do


இந்த முகவரிக்குச் செல்லவும். அங்கே உங்கள் Samsung Account இன் Username மற்றும் Password என்பவற்றை கொடுக்கவும். நீங்கள் உங்கள் கையடக்க தொலைபேசியில் கொடுத்த அதே தகவல்களை உட் செலுத்த வேண்டும். அங்கே கீழுள்ளவாறு ஒரு முகப்பு பக்கம் உங்களுக்கு தோன்றும். அங்கே உங்கள் கையடக்க தொலைபேசி Model காண்பிக்கப் படும். இந்த பக்கத்தில் உங்களுக்கு தேவையான Control மற்றும் Track செய்யும் வேலைகளை செய்து கொள்ள முடியும்.

1. Locate My Mobile - இதைத்தெரிவு செய்வதன் மூலம் உங்கள் கையடக்க தொலைபேசியின் தற்போதைய இருப்பிடம் மற்றும் இறுதி 12 மணி நேரத்தில் உங்கள் தொலைபேசி எங்கெல்லாம் பயணித்த விபரங்களை வரைபடத்தில் பார்க்கலாம்.
2. Lock My Mobile - இதன் மூலம் உங்கள தொலை பேசியைப் பயன்படுத்த முடியாதவாறு Lock செய்து கொள்ள முடியும்.
3. Ring My Mobile - உங்கள் மொபைல் Silent mode இல் இருந்தால் கூட ring ஆகும்.
4. Call Logs - இறுதி ஒரு வாரம் உங்கள் தொலை பேசியில் இருந்து மேற்கொள்ளப் பட்ட மற்றும் உள் வந்த அழைப்புக்களின் தகவல்களை பெறலாம்.
5. Wipe My Mobile - உங்கள் சேமித்து வைக்கப்பட்ட தரவுகள் மற்றும் இலக்கங்கள் என்பவற்றை அழிக் கக்கூடிய Factory Reset / Wipe Delete என்று அழைக்கப்படும் நிரலாக்கலை செய்ய முடியும்.


உங்கள் தொலைபேசிக்கு மட்டுமல்ல நண்பர்களின் தொலைபேசிக்கும் முன்னேற்பாடாய் இதனை செயற் படுத்தி வையுங்கள். யாருடையாயினும் பெறுமதி யாக்கும்.








# குறைந்த விலையில் விமானச்சீட்டுகளைப் பெற கூகுளின் புதிய வசதி-*Google Flights*




எப்படித்தான் யோசிக்கிறாங்களோ இந்த கூகுள் காரங்க தினமும் ஏதாவது ஒரு புது புது வசதியை அறிமுகப்படுத்திக்கொண்டே இருக்கிறார்கள். இவர்கள் வெளியிட்டுள்ள வசதிகளைப் பட்டியல் போடவேண்டு மானால் இந்தப் பதிவு பத்தாது. இதையெல்லாம் மீறி இப்பொழுது புதிய வசதியாக Google Flights என்ற புதிய சேவையை அறிமுகப்படுத்தி உள்ளனர். இந்த வசதியின் மூலம் விமானச்சீட்டுகள் விவரங்கள், விமானம் புறப்படும் நேரம், பயணிக்கும் கால அளவு நம் செலவீனங்களுக்கு ஏற்ற விலைப்பட்டியல் என அனைத்தையும் பார்த்துக் கொள்ளலாம்.

முதலில் இந்த தளம் Google Flights (https://www.google.com/flights) சென்று நீங்கள் கிளம்பும் இடத்தையும் சென்று சேரவேண்டிய இடத்தையும் தேர்வு செய்யுங்கள். இவைகளைத் தேர்வு செய்தவுடன் உங்களுக்கு அனைத்து விவரங்களும் காட்டும்.




| Takeoff | Dur. | Arrival | Airline | Route | Round trip |
|---|---|---|---|---|---|
| 6:00 am | 2h | 8:58 am | Delta | | 4 unknown price |
| 7:29 am | 5h | 1:37 pm | United | via Denver | 10 from $281 |
| 7:29 am | 5h | 1:54 pm | United, Frontier | via Denver | 9 from $281 |
| 7:41 am | 2h | 10:28 am | United | | 6 from $255 |
| 10:20 am | 2h | 1:05 pm | Delta | | 4 unknown price |
| 10:40 am | 5h | 4:25 pm | United, Frontier | via Denver | 11 from $281 |
| 10:40 am | 5h | 4:56 pm | United | via Denver | 10 from $281 |
| 11:44 am | 5h | 5:59 pm | United, Frontier | via Denver | 10 from $281 |
| 12:58 pm | 5h | 7:21 pm | United, US Airways | via Phoenix | 1 from $311 |
| 1:00 pm | 2h | 3:55 pm | Delta | | 4 unknown price |
| 1:10 pm | 2h | 4:12 pm | United | | 5 from $255 |
| 2:45 pm | 4h | 7:50 pm | American | via Los Angeles | 5 from $277 |
| 3:57 pm | 2h | 6:41 pm | United | | 5 from $255 |
| 4:40 pm | 2h | 7:25 pm | Delta | | 4 unknown price |

இதில் உள்ள விவரங்கள் உங்களுக்குத் தேவை யான வகையில் மாற்றிக் கொடுத்து விமானங் களை தேர்வு செய்யலாம். நீங்கள் குறிப்பிட்ட திகதியில் குறிப்பிட்ட தொகைக்கு ஏற்ப உள்ள விமானங்கள் உங்களுக்கு பட்டியலில் தெரியும்.


முக்கியமான விஷயம் இந்த சேவை தற்பொழுது அமெரிக்கா நகரங்களுக்கு மட்டும்தான் அளிக்கப் பட்டுள்ளது. இதன் வரவேற்பைப் பொறுத்து கூடிய விரைவில் அனைத்து நாடுகளுக்கும் இந்த சேவை வரலாம்.

கம்ப்யூட்டர் டுடே

# MS Word இல் இருக்கும் சில வசதிகள் ...

**வண்ணங்களில் டெக்ஸ்ட் ஹைலைட்:**


அச்சில் உள்ள ஆவணங்களைப் பயன்படுத்து கையில், முக்கியமான சில சொற்களை, ஹைலைட்டர் என்னும் பேனாவினால், வண்ணத்தில், சொற்களின் எழுத்துக்கள் தெரியும் வகையில் அமைப்போம். வேர்ட் தொகுப்பிலும் இதேபோல் அமைக்கலாம். பல்வேறு வண்ணங்களில், சொற்களை குழுக்களாகப் பிரிக்கும் வகையில் அமைக்கலாம். தேவைப்படும்போது வண்ணங்களை மாற்றிக் கொள்ளலாம்.




இதற்குப் பயன்படும் டூலின் பெயர் ஹைலைட் டூல் (Highlight Tool). முதலில் வேர்ட் தொகுப்பில், மாறா நிலையில் இது மஞ்சள் வண்ணமாக இருக்கும். கலர் பிரிண்டரில் அச்சிட இது நன்றாக இருக்கும் என்பதால், இந்த வண்ணம் தரப்பட்டுள்ளது. இதனை மாற்ற விரும்பினாலும் மாற்றிக் கொள்ளலாம்.


மெனு பாரில் Hometab இல் உள்ள ஐகான் களிடையே ab என்ற எழுத்துக்களுடன், ஹைலைட்டர் பேனாவுடன் ஒரு ஐகொன் தென்படும். இதன் அருகில் கேசரைக் கொண்டு சென்று, கீழாக உள்ள அம்புக் குறியில் கிளிக் செய்தால், எந்த வண்ணம் வேண்டுமோ, அந்த வண்ணத்தினைத் தேர்ந்தெடுத்து அமைக்கலாம்.

Paragraph Boarder ஐ நீக்க: சிலவேளைகளில், நாம் தயாரிக்கும் பக்கங்களில், சில Paragraph படிப்ப வர்களின் கவனத்தை ஈர்க்க, அதற்கு மட்டும் சுற்றி கட்டம் கட்டி இருப்போம். பின்நாளில் அதனை நீக்க விரும்புவோம். பல வேளைகளில் இதனை எப்படி நீக்கு வது எனத் தெரியாமல் விழிப்போம். இதோ, அதற்கான வழி,





1. எந்த PARAGRAPHவிலிருந்து கட்டத்தினை நீக்க வேண்டுமோ, அதில் கேசரைக் கொண்டு நிறுத்தவும்.
2. ரிப்பனில், Home Tab தேர்ந்தெடுக்கவும்.
3. PARAGRAPH குரூப்பில் உள்ள Borders tool, வலது புறம் கீழாக நோக்கும் அம்புக் குறியினை கிளிக் செய்திடவும் வேர்ட், இப்போது பல தெரிவுகளைக் காட்டும்.
4. இதில் No Border என்பதனைத் தேர்ந்தெடுக்கவும். வோட் PARAGRAPH வினைச் சுற்றி உள்ள கட்டத்தினை நீக்கும்.

# கணினிக் குதைகள்
# COMPUTER PORTS





**க**ணினியுடன் பிற பாகங்களை இணைப்பதற்கான தொடுப்புகள் குதைகள் (Port) எனப்படும்.

1. மின்வலு இணைப்புக் குதை (Power Supply Port)




கணினியுடன் மின் இணைப்பை ஏற்படுத்த பயன்படும்.

2. PS2 குதைகள் (PS2 Ports)




இவை விசைப்பலகை, சுட்டி என்பவற்றைத் தொடுக்க பயன்படுத்தப்படுகிறது. விசைப்பலகையை தொடுக்க ஊதா நிறமும், பச்சை நிறம் சுட்டியை தொடுக்கவும் பயன்படுத்தப்படும். தற்காலத்தில் ps2 port களுக்கு பதிலாக USB குதைகள் பயன்படுத்தப்படுகின்றன

3. USB குதைகள் (USB - Universal Serial Bus)




இவை அச்சியந்திரம், வருடி விசைப்பலகை, சுட்டி என்பவற்றைக் கணினியுடன் இணைக்கப் பயன்படுத்தப்படுகிறது. இக்குதையின் மூலம் பிற துணையுறுப்புக்களைத் தொடுத்தவுடன் பயன்படுத்த முடிவதால் Plug & Play என அழைக்கப்படுகிறது. இதன் மூலம் 127 துணையுறுப்புக்களைத் தொடுக்கலாம்.

4. தொடர் குதை (Serial Port /COM port/ Communication Port)





இவை serial mouse> modem என்பவற்றை இணைக்கப் பயன்படுத்தப்படும். Pin 9> Pin 25 என இரு வகைகள் மேல் உள்ள படத்தில் காட்டப்பட்டுள்ளது. முனைப்பகுதிகள் கொண்டுள்ள குதைகள் MALE எனவும் உட்புற அமைப்பை கொண்டவை FEMALE எனவும் அழைக்கப்படும்.

5. சமாந்திரக்குதை (Parallel Port)




இது அச்சு இயந்திரத்தைத் தொடுக்கப் பயன்படுத்தப்படுகிறது.

6. VGA குதை (Video Graphic Array Port)




இவை Monitor> Projector என்பவற்றைத் தொடுக்க பயன்படுத்தப்படுகிறது.

7. ஒலி விளையாட்டு துணையுறுப்புக்குதைகள் (Sound and Game Ports)




இவை ஒலி விளையாட்டு துணையுறுப்புகளை இணைக்கப் பயன்படும். Joystick, Speakers, Microphone, external sound devices and Etc

8. வலையமைப்பு குதை (Network Port)



கணினியை இணையத்துடன் தொடுப்பதற்கு வலையமைப்பு குதை உதவுகிறது.

ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைக்கும் வேலைக்கு ஒருவன் விண்ணப்பித்திருந்தான். தரை துடைத்துக் காட்டச் சொன்னார்கள். நன்றாகத் துடைத் தான். அடுத்து சின்னதாய் ஒரு இண்டர்வியூ. கடைசியில் அவனிடம் தகவல் சொல்வதற்காக ஈ-மெயில் முகவரி கேட்டார்கள்.

ஈ-மெயிலா? எனக்கு ஈ-மெயில் இண்டர் நெட் எல்லாம் தெரியாதே' என்றான் துடைக்க வந்தவன்.

'கம்ப்யூட்டர் நிறுவனத்தில் வேலை பார்க்க விரும்பு கிறவனுக்கு ஈ-மெயில் முகவரி இல்லயா? ச்சே!' என்று அவனை அனுப்பி விட்டார்கள்.



# கணினி நிறுவனத்தில் வேலை

வேலை இல்லை என்றதும் அவனுக்கு என்ன செய்வதென்று தெரியவில்ல. கையில் 10 ரூபாய்கள் இருந்தன. அதைக் கொண்டு சந்தையில் வெங்காயம் வாங்கினான். பக்கத்து குடியிருப்புப் பகுதியில் கூவிக் கூவி விற்றான் 10 ரூபாய் லாபம் கிடத்தது. மீண்டும் வெங்காயம் மீண்டும் விற்பன. இப்படியே கொஞ்சம் கொஞ்சமாய் விற்று சில வருடங் களில் பெரிய வெங்காய வியாபாரி ஆகிவிட்டார்.

இந்தச் சூழ்நிலயில் ஒரு வங்கிக் கணக்கு திறப்ப சம்பந்தமாக, ஒரு வங்கி ஊழியர் அவரிடம் பேச வந்திருந்தார். அவனுடய ஈ-மெயில் முகவரி கேட்டார். வியாபாரி, 'ஈ-மெயில் முகவரி இல்லை' என்று பதிலளிக்க,


ஈ-மெயில் இல்லாமலே இந்தக் காலத்தில் இவ்வளவு முன்னேறி விட்டீர்களா? உங்களுக்கு மட்டும் ஈ-மெயில், இண்டர்நெட்டெல்லாம்...? 'தெரிந்திருந்தால் என்று ஆச்சரியமாய்க் கேட்டார் வங்கி ஊழியர்.

அதெல்லாம் தெரிந்திருந்தால் ஒரு கம்ப்யூட்டர் நிறுவனத்தில் தரை துடைத்துக் கொண்டிருப்பேன்' என்றார் வியாபாரி.


**கம்ப்யூட்டர் ருடே யில் பிரசுரமாகும் ஆக்கங்களை ஆசிரியரின் அனுமதியின்றி பகுதியாகவோ, முழுமையாகவோ மறுபிரசுரம் செய்ய இயலாது**



# குழந்தைகளுக்கான கணினியில் விளையாடும் CUBE விளையாட்டு



ஒரு காலத்தில் மிகவும் பிரபலமான விளையாட்டாக CUBE இருந்தது. இன்றும் சிலர் வீடுகளில் பழைய பொருட்களில் CUBE இருப்பதைக் காணலாம். மாறிவரும் காலத்திற்கு ஏற்ப CUBE விளையாட்டும் இன்று கணினியில் விளையாடும் அளவிற்கு வந்துவிட்டது. இன்று CUBE கணினியில் விளையாடுவதைக் காணலாம். இதை இணையத்தில் இலகுவாக இலவசமாகப் பதிவிறக்கிக் கொள்ளலாம். இதைப் பதிவிறக்கம் செய்ததும் உங்களுக்கு கீழ்கண்ட விண்டோ திறக்கும்.

இதில் உள்ள edit சென்று Scramble சுட்டவும்

உங்களுக்கு எந்தனை முறை அதை மாற்றிவைக்க வேண்டும் (அதாவது குலுக்கல் செய்யவேண்டும்) என்று கேட்கும். விருப்பமான எண்ணைத் தரவும்.

குலுக்கியபின் உங்களுக்கு இப்போது நீங்கள் அனைத்து வண்ணங்களையும் ஒரே பக்கத்தில் கொண்டு வரவேண்டும்.

சுட்டியால் படத்தில் வைத்து அழுத்தியபடி வேண்டிய திசையில் நகர்த்தினால் வேண்டிய கட்டங்கள் மாறுவதைக் காணலாம்.



# அன்றாட வேலைகளில் இணையத்தின் தாக்கம்





தொழில்நுட்பங்களின் வளர்ச்சி நம் வாழ்க்கை முறையை மாற்றியமைத்துவிட்ட நிலையில் இணையத்தின் தாக்கம் அன்றாட வேலைகளை எளிமையாக்கியுள்ளது என்று சொல்லலாம். இனி வரும் காலங்களில் இணையத்தின் தாக்கம் நம் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு மாற்றும் என்பதைப் பார்ப்போம்.

**CAR Tuning :** 'SMART' எனும் தொழில்நுட்பம் கார்களில் அதிக தாக்கத்தை ஏற்படுத்துவதோடு சரியான நேரத்தில் செய்யவேண்டிய மாற்றங்களை பரிந்துரைக்கும்.

**உடல்நலம் :** நோயாளிகளுக்கு ஏதும் பிரச்சனை ஏற்படும்போது மருத்துவருடன் இன்டர்நெட் மூலம் இணைப்பில் இருந்துகொண்டு கவனிக்கமுடியும். குழந்தையின் உடல் நலத்தைப் பெற்றோர்கள் தொலை பேசிகளினூடாகவும் அவதானித்துக் கொள்ள முடியும்.

**மின்சக்தி:** வீட்டில் உபயோகிக்கப்படும் மின் சாதனங்கள் குறைந்த அளவு மின்சாரத்தைப் பயன்படுத்தும்படி வடிவமைக்கப்படலாம்.

**போக்குவரத்து:** நேரத்திற்கேற்றார் போல் சமிக்கைகள் மாறும், மேலும் Ambulance ஏதும் வந்தால் அதற்கு சாதகமாக சமிக்கை மாற்றியமைக்கும்.

**இருப்பு :** குளிர்சாதனப் பெட்டிகளில் அத்தியாவசிய பொருட்களின் இருப்புக் குறைந்தால் தானாக எச்சரிக்கை செய்யும்.

**முன்னெச்சரிக்கை :** போக்குவரத்து நெரிசலுக்கு ஏற்ப முன்னெச்சரிக்கையாகச் செயற்படும்.




1. கணினியின் முக்கியமான நான்கு முக்கிய பண்புகளையும் தருக.

✍ வேகம்,நம்பகத்தன்மை, திருத்தம், சேமிக்கும் தன்மை

2. கணினி வழி கற்றல் என்பதைக் CAL என்போம். CAL என்பதன் விரிவாக்கம் என்ன ?

✍ Computer Aided Learning

3. வங்கிகளில் கணினியின் பிரயோகத்திற்கு சிறந்த உதாரணமாக ATM இயந்திரத்தைக் குறிப்பிடலாம். ATM என்பதன் விரிவாக்கம் என்ன ?

✍ Automated Teller Machine

4. கணினி மூலம் கட்டடங்கள், பாலங்கள் மற்றும் இயந்திரங்கள் வடிவமைத்தலை CAD எனப்படும். CAD என்பதன் விரிவாக்கம் என்ன ?

✍ Computer Aided Designing

5. ஒழுங்குபடுத்தப்பட்ட தரவு எவ்வாறு அழைக்கப் படும்.

✍ தகவல்

6. மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட முதல் கணிக்கும் கருவி எது ?

✍ அபகஸ் (Abacas)

7. முதன் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட இலத் திரனியல் கணினி எது ?

✍ ENIAC

8. முதலாம் தலைமுறைக் கணினிகள் எதனை பிரதானமாகக் கொண்டு உருவாக்கப்பட்டன.

✍ வெற்றிடக் குழாய்கள் ( Vacuum Tube )

9. இரண்டாம் தலைமுறைக் கணினிகளில் எதனைக்கொண்டு மின்சுற்றுக்கள் உருவாக் கப்பட்டன.

✍ Transistors

10. ஒருங்கிணைக்கப்பட்ட மின்சுற்றுகள் என்பதை IC எனப்படும். IC என்பதன் விரிவாக்கம் என்ன ?

✍ Integrated Circuits

11. கணினியின் தந்தை என அழைக்கப்படுவர் யார் ?

✍ சார்ல்ஸ் பப்பேஜ்

12. தற்போது பாவனையிலுள்ள நான்கு வகைக் கணினிகளும் எவை ?

✍ Super, Main Frame, Mini, Micro

13. Micro Computer வகையைச் சார்ந்த இரண்டு கணினிகளும் எவை ?

✍ Desktop, Laptop

14. ஒரு முழுமையான கணினி முறைமையில் (Total Computer System) அடங்குபவை எவை ?

✍ வன்பொருள், மென்பொருள், தரவு, பயனர்

15. கைகளால் தொடக்கூடிய, கண்களால் பார்க்கக் கூடிய கணினி பாகங்களை எவ்வாறு அழைக்கப்படும் ?

✍ வன்பொருள் (Hardware)

16. கணினியின் மூளையாகச் செயற்படும் CPU என்பதன் விரிவாக்கம் என்ன ?

✍ Central Processing Unit

வாசகர்களே !

கணினி தொடர்பான உங்களது சந்தேகங்களுக்கு "வலையோடி" பதில் தரக் காத்திருக்கிறார். கேள்விகள் அனுப்ப வேண்டியது:

**"வலையோடி"**
**359, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

**தொலைபேசி : 021 5 677 600**
**info@computertoday.lk**

PUBLIC LIBRARY
JAFFNA




# ஆங்கிலம் கற்க சிறந்த இணையங்கள்

சர்வதேச மொழியான ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ள பல இணையத்தளங்கள் உள்ளன அவற்றில் இருந்து நான்கு பயனுள்ள தளங்களை இங்கே பார்க்கலாம்.

### 1.FUN EASY ENGLISH


அடிப்படை ஆங்கில அறிவுக்கான அதிக விளக்கத்தை இந்த தளத்தில் பெறலாம். சொல் உச்சரிப்பு மற்றும் இலக்கணம் என்பன பெரும்பாலும் வீடியோ ஓடியோ வசதியுடன் கற்றுக்கொள்ள முடியும்.




http://funeasyenglish.com/

### 2.GO 4 ENGLISH


இந்த தளம் பிரிட்டிஷ் கவுன்சிலுக்குச் சொந்தமானது. ஆசிரியர்கள் மாணவர்களுக்கான ஆங்கில அறிவை இந்தத் தளம் வழங்குகிறது.




http://go4english.co.uk/

### 3. LEARN ENGLISH FREE ONLINE


ஆங்கில சொற்களுக்கான விளக்கத்தை படங்கள் மற்றும் வேடிக்கையாகக் கற்று தருகிறது இந்தத் தளம்.




http://www.learnenglish.de/

### 4.EXAM ENGLISH

பிரபல சர்வதேச ஆங்கில தேர்வுகளை உள்ளடக்கிய ஓர் பரீட்சை வழிகாட்டி தளமாகும். இங்கு சென்று உங்கள் ஆங்கில அறிவினைப் பரீட்சித்துக் கொள்ளமுடியும்.





http://www.examenglish.com/

# Java Script இனைப் பயன்படுத்தி மிக எளிதாக கணினிவிளையாட்டுகளை உருவாக்கிடமுடியும்

கணினியின் திரையும் இயக்கமுறைமைகளும் கறுப்புவெள்ளையாக இருந்த காலத்திலிருந்தே கணினி விளையாட்டுகளும் இருந்துவருகின்றன அதிலும் கைபேசியையைகூட தற்போது கணினியை போன்று பயன்படுத்தும் இன்றைய காலகட்டத்தில் கணினி விளையாட்டுகள் மிகமுக்கிய இடத்தை வகிக்கின்றன. இவ்வாறான கணினியின் விளை யாட்டுகளை லினக்ஸ் இயக்க முறைமையில் நம்மால் எளிதாக உருவாக்கிடமுடியும். பொதுவாக இணைய பயன்பாடுகளின் உலாவிக்குள் செயல்படும் Java sript இனைப் பயன்படுத்தி மிகஎளிதாக கணினி விளையாட்டுகளை உருவாக்கிடமுடியும். இந்த Java sript இனை கொண்டு கணினிவிளையாட்டுகள் என தேடினால் இணையத்தில் ஏராளமான புத்தகங்கள் கிடைக்கின்றன. அவைகளுள் ஒன்றினை பதிவிறக்கம் செய்து கற்று தெளிவடைந்து நம்மாலும் புதியதாக கணினி விளையாட்டுகளை உருவாக்க முடியும். இவ்வாறான புதியதாக கணினி விளையாட்டுகளை உருவாக்க நம்மிடம் Java sript உம், ஃபயர் ஃபாக்ஸ் இணைய உலாவியும், ஜிஎடிட் எனும் பதிப்பு பயன்பாடும் இருந்தால் போதுமானவையாகும்.

இந்த Java sript இனைக் கொண்டு முதலில் <canvas> என்பதை அமைவுசெய்துகொண்டு moveto, lineto, stroke,pendown.penup, ஆகிய கட்டளைகளைக் கொண்டு எளிதாக கணினி விளையாட்டுகளை உருவாக்கிவிடலாம் இருபரிமான முப்பரிமான விளை யாட்டுகளை கூட http://www.processing.org எனும் இணையத்தளத்தினுள்sprocessing எனும் எளிய கணினி விளையாட்டுகளுக்கான மொழியைக் கொண்டு உருவாக்கமுடியும்.





இந்த மொழியை நம்முடைய கணினியில் நிறுவுகை செய்து பயன்படுத்த வேண்டாம் என விரும்புவோர்கள் கவலையேபட வேண்டாம் DistroPureDyne என்பதை கொண்டு<http://puredyne.en.malvida.com/linux/ எனும் தளத்தில் மிக எளிதாக கணினி விளையாட்டு களை உருவாக்கலாம். அதுமட்டுமல்லாது இந்த கணினி விளையாட்டுகளை செயல்படுத்துவதற்கான பொறியை https://www.unrealengine.com/blog/unrealengine-4-and-linux/> எனும் தளத்திலிருந்து பெற்று செயற்படுத்தி சரிபார்த்திடலாம்.






# நீண்ட நேரம் கணினியை பயன்படுத்துகின்றீர்களா, கண்ணைக் காப்பாற்றிக்கொள்ளுங்க

நிறுவனத்தில் காலை முதல் மாலை வரை கணினியையே பார்த்துக்கிட்டு இருக்கீங்களா, இதனாலேயே உங்களுக்கு கண்டிப்பாக கண் பார்வையில் பிரச்சனை இருக்குமே. இந்த பிரச்சினையைச் சரிசெய்ய சில எளிய முறைகளைத் தான் இங்கு நாம் பார்க்க இருக்கின்றோம்.








கண்களில் எரிச்சல் அல்லது தலைவலியோ ஏற்பட்டால் உங்கள் கண்களுக்கு ஓய்வுகொடுக்க வேண்டும். கண்களுக்கு ஓய்வுகொடுத்தும் இந்த பிரச்சினைகள் தொடர்ந்தால் திரையின் இடைவெளியை அதிகமாக்குங்கள். திரைக்கு நேராக அமருங்கள், அவை உங்கள் கண் பார்வைக்கு மேலாகவோ அல்லது கீழாகவோ இருந்தாலும் இந்தப் பிரச்சனை ஏற்படலாம். கணினியின் திரை உங்கள் முகத்திற்கு நேராக இருக்கும் பட்சத்தில் பிரச்சனை குறைய ஆரம் பிக்கும்.

இதன்பின் 20 நிமிட இடைவெளியில் 20 அடி தூரத்தில் இருக்கும் பொருளை 20 வினாடிகள் தொடர்ந்து பார்க்க வேண்டும். இதை உங்களுக்கு நினைவூட்ட இணையத்தில் நிரலியும் உள்ளது. பார்வையை பாதுகாத்துக் கொள்ளுங்கள் இணையத்தளத்தில் 'Protect Your Vision' என்ற தளம், 20 நிமிட இடைவெளியில் உங்களுக்கு நினைவூட்டுவதோடு, அதில் இருக்கும் பாவனைகளைச் செய்வது கண்களுக்கு ஓய்வை கொடுக்கும்.

# 'கணினி வழி தமிழ்மொழி கற்போம்'

# சிங்கப்பூரில் உலக தமிழ் இணைய மாநாடு



**உலக தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) இனால் வருடம்தோறும் நடாத்தப்படும் தமிழ் இணைய மாநாடு இம்முறை சிங்கப்பூரில் மே மாதம் 30ஆம் திகதி ஆரம்பமாகி 3 நாட்கள் நடைபெறவுள்ளது.**

இது தொடர்பாக அந்த அமைப்பின் செயல் இயக்குநர் **திரு. த.தவரூபன்** அவர்களுடனான செவ்வி.

***உத்தமம் என்றால் ? அதன் ஆரம்ப காலம் பற்றி!***

உலக தமிழ் தகவல் தொழில்நுட்ப மன்றம் (உத்தமம்) என்றழைக்கப்படும் இந்த அமைப்பு ஆங்கிலத்தில் International Forum for Information Technology (INFITT) என்ற பெயரில் அமெரிக்காவின் கலிபோர்ணியா மாகாணத்தில் இலாப நோக்கம் அற்ற அமைப்பாக பதிவு செய்யப் பட்டுள்ளது.

தமிழ்த் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான விடயங்களை ஆய்வு செய்யும், செந்தரங்களை பரிந்துரைக்கும் ஒரு அமைப்பு இதுவாகும். இவ்வமைப்பு உத்யோகபூர்வமாக யூலை 24, 2000 அன்று சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்பட்டது.

இவ்வமைப்பின் முக்கிய நிகழ்வாக தமிழ் இணைய மாநாடுகள் தொடர்ச்சியாக 2000 முதல் உலகத்தின் பல பாகங்களிலும் நடைபெறுகின்றது.

இதற்கு உலகெங்கும் உள்ள தமிழ் பேசும் பகுதிகளில் உறுப்பினர்கள் உள்ளனர். இவ்வமைப்பில் தனிநபர் மற்றும் மாணவர் உறுப்புரிமைகள் உள்ளன. தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் குறித்து ஆர்வமுடைய மொழியியலாளர்கள் கணினி வல்லுநர்கள் ஆர்வலர்கள் உறுப்பினர்களாக இணைந்திருக்க முடியும்.

மேலதிக விபரங்களுக்கு அமைப்பின் www.infitt.org என்ற இணையத்தள முகவரியை நாடவும்

***இது வரை சாதித்தவை என்ன?***

நான் முன்னரே கூறியதுபோல அதனுடைய முக்கிய நோக்கம் தமிழ் இணைய மாநாட்டு தொடரினை நடாத்துதல் மற்றும் உள்ளூர் சர்வதேச அரச அமைப்புக்களுடன் ஒரு தொழில்நுட்ப உறவுப் பாலத்தினை மேற்கொள்வதும் ஆகும். அத்துடன்

உத்தமம்
INFITT
உலகத் தமிழ்த் தகவல் தொழில்நுட்ப மன்றம்
International Forum for Information Technology in Tamil

மக்களுக்கும் இளைய சமுதாயத்திற்கும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் தொடர்பிலான ஒரு விழிப்புணர்வினை நிகழ்வுகள் கருத்தரங்குகள் பயிற்சிப்பட்டறைகள் ஊடாக ஏற்படுத்தி ஊக்குவிப்புகளைச் செய்வதும் அதனுடைய பணிகளாக இருந்திருக்கின்றன.

அந்த வகையில் கடந்த 13 மாநாடுகளின் ஊடாக நிறைய ஆய்வுக்கட்டுரைகளை தகவல் தொழில்நுட்ப சமூகத்திற்கு வழங்குவதற்கு வழிவகுத்திருக்கின்றது. இந்தியா, அமெரிக்கா இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளில் சிறு சிறு பயிலரங்குகள் ஒன்றுகூடல் நிகழ்வுகளை அவ்வப்போது ஏற்பாடு செய்து மக்களிடையே ஓரளவுக்கு விழிப்புணர்வினை ஏற்படுத்தியிருக்கின்றது. தகவல் தொழில்நுட்ப வியலாளர்கள் மொழியியலாளர்களுடன் இணைய வழியில் மின்னஞ்சல் குழுமங்கள் வாயிலான தொடர்புகளைப் பேணி வருகின்றது.

மேலும், யுனிக்கோடு ஒருங்கியத்துடன் நெருக்கமான உறவுகளைப் பேணிவருகின்றது. தொழில்நுட்ப உப குழுக்களை உருவாக்கி தமிழானது தகவல் தொழில்நுட்பத்தில் செல்வாக்கு செலுத்துவதற்கு தன்னாலியன்ற பணிகளைச் செய்து வருகின்றது.

தொட்டுணரக்கூடிய திட்டங்களில் பெரிதும் செல்வாக்கு செலுத்தாதபோதிலும் தகவல் தொழில்நுட்பத்தில் தமிழ் என்ற கருப்பொருளில் உலகளாவிய ரீதியில் ஒரு கருத்தியல் செல்வாக் கினை ஏற்படுத்துவதிலும் மென்பொருள் வடி வமைப்புக்களுக்குக் கருப்பொருளாக அமையக் கூடிய ஆய்வுகள் பரிணமிக்கவும் இணையத்தில் தமிழ் பரவுவதற்கான ஆர்வத்தினை ஏற்படுத்திய ஒரு முன்னோடி அமைப்பாகவும் செயற்பட்டு வருகின்றது. மாநாட்டு வேளைகளில் தமிழ் மென்பொருட்களை சந்தைப்படுத்துவதற்குக் களமமைக்கும் கண்காட்சிகளையும் ஏற்பாடு செய்து வருகின்றது.

**தமிழ் இணைய மாநாடு எப்போது ஆரம்பிக்கப்பட்டது? அதனால் சாதிக்கப்பட்டவை என்ன? இந்த முறை தமிழ் இணைய மாநாடு எங்கே எப்போது நடைபெறும்?**

முதலாவது தமிழ் இணையமாநாடு 1997 ஆம் ஆண்டு சிங்கப்பூரில் ஆரம்பிக்கப்பட்டது. இறுதியாக 13வது மாநாடு இந்தியாவில் புதுச்சேரி மாநிலத்தில் நடைபெற்றது. 14ஆவது மாநாடு சிங்கப்பூரில் வருகின்ற மே 30 தொடக்கம் சூன் 1 ஆம் திகதி வரை 3 நாட்களுக்கு நடைபெற உள்ளது. இந்த மாநாடுகளின் பயன்குறித்து முதற்கேள்வியில் நான் விரிவாகப் பதிலளித்திருக்கின்றேன்.

**இம்முறை மாநாடு பற்றியும் அதில் யார் யார் பங்கெடுக்கிறார்கள் என்றும் கூறமுடியுமா?**

இந்நிறுவனம் தொடங்கிய கடந்த பதினாறு வருடங்களில் பன்னிரண்டு மாநாடுகளைப் பல்வேறு நாடுகளில் நடத்தி உலகெங்கிலும் உள்ளத் தமிழர்களை ஒருங்கிணைத்துள்ளமை தமிழர்கள் அனைவரும் பெருமைப்படும் செய்தியாகும்.

தமிழகம், சிங்கப்பூர், மலேசியா, செர்மனி மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகளில் இந்நிறுவனத்தின் மாநாடுகளை மிகவும் சிறப்பாக நடத்தி உலகத் தமிழர்கள் அனைவரையும் இந்நாடு களில் ஒருங்கிணைய வைத்து "யாதும் ஊரே! யாவரும் கேளிர்!" என்னும் வாக்கைச் சிறப்புற நடைமுறைப்படுத்தி வருவதில் உத்தமம் நிறுவனம் பெருமை கொள்கிறது.

இம்முறை "கணினி வழி தமிழ் மொழி கற்போம்" என்ற தொனிப்பொருளில் மாநாடு நடைபெறுகின்றது. இம்மாநாடு சிங்கப்பூரின் 50வது வருட நிறைவில் சிங்கப்பூர் சிம் பல்கலைகழகம் மற்றும் அரசு சார், தனியார் கல்வி நிறுவனங்கள் பலவற்றுடன் இணைந்து நடாத்துகின்றது. கண்காட்சியும் மக்கள் பயிலரங்கும் கூடவே ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆய்வுகளுக்குக் களமளிக்கும் அதேவேளை மென்பொருள்களுக்குச் சந்தை வாய்ப்பும் மக்கள் மற்றும் மாணவர்களுக்கான விழிப்புணர்வும் உறுதிப் படுத்தப்படுகின்றது.

இம்மாநாட்டில் யுனிக்கோட் ஒருங்கியத்தின் தொழில்நுட்பக்குழு தலைவர் "லிசா மூர்" மற்றும் இந்திய அரசு பிரதிநிதிகளும் உள்ளிட்ட கணினி வல்லுனர்கள் மொழியிலாளர்கள் பலர் பங்கெடுக்கின்றனர்.

மேலதிக விபரங்களுக்கு அமைப்பின் இணைய முகவரியை நாடவும்.

**ஈழமண்ணில் மாநாடு நடைபெறாமைக்குக் காரணம் என்ன?**

முக்கிய காரணம் போர் நடைபெற்றமைதான். பலமுறை நாம் முயற்சி எடுத்தோம் கை கூடவில்லை. இனிவரும் காலங்களில் நிச்சயம் இலங்கையில் ஒரு மாநாட்டினை யாழ் பல்கலைக்

கழகத்தில் நடாத்துவதற்கான முயற்சிகளை எடுத்து வருகின்றேன். அது கைகூடும் என்ற நம்பிக்கை உள்ளது.

**உத்தமத்தில் உங்களின் வகிபாகம் என்ன? மாநாட்டில் உங்கள் வகிபாகம் என்ன?**

நான் கடந்த 2004 ஆம் ஆண்டில் இருந்து இந்த அமைப்பில் உறுப்பினராக உள்ளேன். இரண்டு வருட பதவிக்காலம் உடைய செயற்குழுவில் இரண்டு தடவை இருந்திருக்கின்றேன். கடந்த வருடம் தொடக்கம் அதனுடைய செயல் இயக்குநராக தொழிற்பட்டு வருகின்றேன். சென்ற வருடம் தலைவராக அமெரிக்க உறுப்பினர் முனைவர் வாசு அரங்கநாதனும் இந்த வருடம் தலைவராக திரு. சு. முகுந்தராஜும் கடமையாற்றி வருகின்றனர்.

நான்கு மாநாடுகளில் நான் கலந்து கொண்டிருக்கின்றேன். 3 மாநாடுகளில் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பித்திருக்கின்றேன். இந்த மாநாட்டில் நான் செயல் இயக்குனர் என்ற வகையில் கலந்து கொள்ள வேண்டிய நிலையில் உள்ளேன்.

**மாநாடுகளில் நீங்கள் பங்கெடுத்ததால் நீங்கள் அடைந்த நன்மைகள் என்ன? எங்கள் நாடு அடைந்த நன்மை என்ன?**

பலதரப்பட்ட அறிஞர்களின் தொடர்பு கிடைத்தது. தமிழ் மென்பொருள்கள் பற்றிய தகவல்களை அறியக்கிடைத்தது. அத்துடன் தமிழ் மென்பெருள்கள் பற்றிய விழிப்புணர்வையும் ஆர்வத்தினையும் அதிகரிக்க முடிந்தது. ஆய்வுகளில் கருத்துப் பரிமாற்றங்களைச் செய்ய முடிந்தது.

அதன் மூலம் நாம்சார்ந்த சமூகத்திற்கு என்னுடைய தொழில் நுட்ப செயற்பாடுகளில் தமிழினை வெற்றிகரமாக பிரயோகம் செய்ய முடிந்திருந்தது. அத்துடன் எனது வணிக நடவடிக்கைகளில் என்னுயை மென்பொருள் இணையத்தள வடிவமைப்பு செயற்பாடுகளில் தமிழினை உட்புகுத்துவது தொடர்பிலான மேலதிக அறிவுடன் செயற்பட்டு என்னாலியன்ற பணிகளைச் செய்ய முடிந்துள்ளது. அதன் காரணமாக எனது மாணவர்களும் வாடிக்கையாளர்களும் நிறைய பலன் களைப் பெற்றுள்ளனர்.

நன்றி.

## ஒரு மாணவன் ஒரு சந்தேகத்தை எழுப்பினான்..

" கணினி ஆணா" பெண்ணா..?"

கணினி ஆண் தான் என்றார்கள் மாணவிகள் சொன்ன காரணங்கள்.

1) அதுக்கு எதையும் சுலபமாகப் புரியவைக்க முடியாது..
2) உருவாக்கினவனைத் தவிர வேறே யாருக்கும் அதனுடைய நடைமுறையை புரிந்துகொள்ள முடியாது..
3) நாம் ஏதாவது தப்பு செய்தால் மனசுலேயே வைத்திருந்து நேரம் பார்த்து மானத்தை வாங்கும்.
4) எந்த நேரத்தில் கையும்" எந்த நேரத்தில் மயங்கும் என்று சொல்லவே முடியாது..
5) எம்மிடம் இருப்பதைவிட அடுத்தவர்களிடம் இருப்பது நல்லா வேலை செய்யிறது மாதிரி தோன்றும்"! மாணவர்களோ கணினி பெண் பால்தான் என்று சாதித்தார்கள். அதுக்கு ஆதாரமாக அவர்கள் சொன்னது இதோ"

1) எப்பவுமே அடுத்த கணினியோட ஒத்துப் போகவே போகாது..
2) எட்ட இருந்து பார்க்க கவர்ச்சிகரமாக இருக்கும்.. ஆனா கிட்டபோனாதான் அதனுடைய வண்ட வாளம் தெரியும்..
3) நிறைய ஸ்டோர் பண்ணி வச்சிருக்கும்.. ஆனா எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று அதுக்கு தெரியாது..
4) பிரச்சினையைக் குறைப்பதற்காக கண்டு பிடிக்கப்பட்டவை.. ஆனால் பெரும்பாலான சமயங்களில் அதுகளேதான் பிரச்சினையே..
5) அதை சொந்தமாக்கிக்கிட்ட பிறகுதான் நமக்கு புரியும்.. அடடா இன்னும் கொஞ்சம் பொறுமையா இருந்திருந்தா இதைவிட அருமையான மொடல் கிடைத்திருக்கும் என்று"!

# அன்புள்ள

# பில் கேட் அய்யா அவர்களுக்கு...

**வணக்கம். நாங்கள் எங்களுடைய வீட்டு உபயோகத்திற்கு கணினியொன்று வாங்கினோம் அதில் ஒருசில பின்வரும் பிரச்சினைகள் எழுந்துள்ளது. அதனை தங்களின் கனிவான கவனத்திற்கு கொண்டு வந்துள்ளோம். அதனைத் தீர்த்து வைத்தால் மிக நன்றியுள்ளவர்களாக இருப்போம்.**

**பிரச்சினை1:** எங்களுடைய கணினியில் கீழே இடதுபுறத்தில் Start என்ற பொத்தான் உள்ளது. ஆயினும் Stop என்ற பொத்தானை எங்கேயும் காணவில்லையே என்னசெய்வது?.

**பிரச்சினை2:** எங்களுடைய கணினியில் Recycle bin என்பது உள்ளது அவ்வாறே Re-scooter bin என்று ஏதேனும் இருக்குமா? கொஞ்சம் தெளிவு படுத்துங்களேன்?

**பிரச்சினை3:** எங்களுடைய கணினியில் Find என்ற பொத்தான் உள்ளது. இது நாம் தேடுவது எதுவாக விருந்தாலும் நம்மிடம் தேடிக் கொடுத்துவிடும் என்ற நம்பிக்கையில் எங்களுடைய மகளின் கொண்டை ஊசியைத் தேடும்படி கூறினோம். தேடித்தரவில்லையே நாங்கள் எவ்வாறு அதனை தேடிப்பெறுவது?

**பிரச்சினை4:** மழலையர் பள்ளியில் பயிலும் எங்களுடைய மகன் Microsoft Word என்பதனை நன்கு ஐயமற கற்றுக்கொண்டான். ஆனாலும் Microsoft sentence என்பதை நான் எப்போது அப்பா கற்றுக்கொள்வது ? என்று வினா எழுப்பிக் கொண்டே இருக்கின்றான் என்ன செய்வது எனத் தெரியாமல் ஒரே குழப்பமாக உள்ளது.

**பிரச்சினை5:** நாங்கள் எங்களுடைய வீட்டிற்கு Computer, CPU, Mouse, Keyboard ஆகிய அனைத்தையும் சேர்த்துத்தான் கொள்முதல் செய்துவந்தோம். ஆனால் எங்களுடைய கணினியின் திரையில் My Computer என்பதை மட்டும் காண்பிக்கின்றது. மற்றபொருட்களை எதுவும் காணவில்லையே ஏன்?

**பிரச்சினை6:** எங்களுடைய கணினியின்திரையில் கோப்பகத்தில் MY Pictures என்பதை மட்டும் காண்பிக்கின்றது. சரிதான் என மகிழ்ச்சியுடன் கோப்பகத்தினை திறந்து பார்த்தால் என்னுடைய சின்னஞ்சிறிய ஒளிப்படம் ஒன்றைக்கூட காண வில்லையே? உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்க.

**பிரச்சினை7:** அய்யா நாங்கள் கணினியை எங்களுடைய வீட்டு உபயோகத்திற்குத்தான் MICROSOFT HOME வாங்கிவந்தோம். ஆனால் உங்கள் நிறுவனம் அலுவலக உபயோகத்திற்கென்று MICROSOFT OFFICE என்பதை அளித்துள்ளது. இது எப்படி நியாயமாகும்? கண்டிப்பாக இதற்காகவென்றே நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப் போகின்றோம்

**பிரச்சினை8:.** எங்களுடைய கணினியல் My Recent Documentsஎன்ற பகுதியில் என்னுடைய சமீபத்திய ஆவணங்களைப் பட்டியலிட்டது கண்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஆனாலும் என்னுடைய கடந்தகால ஆவணங்களை My Past Documents எங்கு பட்டியலிட்டுள்ளீர்கள்? கொஞ்சம் தெளிவுபடுத்தினால் நல்லது.

**பிரச்சினை9:** என்னுடைய வலைப்பின்னல் ஆல Network Places என்ற பகுதியை வைத்துள்ளீர்கள் ரொம்ப மகிழ்ச்சி என்னுடய இரகசிய பகுதி My Secret Places ஏதேனும் நான் வைத்துள்ளதாக வீட்டுக்கார அம்மாவிடம் வத்திவைத்து சிண்டு எதுவும் முடிந்துவிடாதீர்கள். ரொம்பப் புண்ணியமாகப் போகும்.

பின்குறிப்பு : அய்யா நீங்கள் விற்பனை செய்வதோ சாளரம் WINDOWS ஆனால் உங்களுடைய பெயரை மட்டும் கதவு GATES என ஏன் வைத்துள்ளீர்கள்?

நன்றி

என்றும் தங்கள் அன்புள்ள

**அருகசருக**




# உங்கள் Domain Expire ஆகப்போகிறதா? உடனடியாக Renewal செய்துவிடுங்கள்..!

உங்களுடைய தேவைக்கு நீங்கள் வாங்கிய Domain ஒரு வருடத்திற்கு மட்டும் செல்லுபடி ஆகும்படி வாங்கியிருப்பீர்கள். அந்த செல்லுபடி ஆகும் தேதி (Expire Date) முடிந்துவிட்டால் டொமைன் பெயர் காலாவதியாகிவிடும்.

இதுகுறித்து, உங்களுக்கு நினைவுபடுத்த நீங்கள் எந்த நிறுவனத்தில், டொமைன் பெயர் வாங்கினீர்களோ, அதிலிருந்து நினைவுபடுத்தும் மின்னஞ்சல் வந்திருக்கும்.

உங்களது பணிக்கிடையில் நீங்கள் அதை ஒரு பொருட்டாக எடுத்துக்கொள்ளாமல், அப்புறம் பார்க்கலாம் என்று அசட்டையாக இருந்துவிடுவீர்கள்.

டொமைனில் காலாவதி திகதி முடியும்வரை விட்டு விட்டு, பிறகு சாவகாசமாக அதை மீண்டும் புதுப்பிக்க நினைத்தால், அந்த டொமைன் வேறொருவரால் வாங்கப்பட்டிருப்பது தெரியவரும்.

ஏன் இப்படி?

ஒருவரின் டொமைன் பெயரை மற்றவர்கள் ஏன் வாங்க வேண்டும்?

மிகப்பெரிய காரணம் உள்ளது. அந்த டொமைன் பெயரில் குறைந்த பட்சம் நீங்கள் ஒரு வருடம் பயன் படுத்தியிருப்பீர்கள். அந்த டொமைனிலிருக்கும் போது நீங்கள் எழுதிய கட்டுரைகள் அனைத்தும் கூகிள் தேடல் தளத்தில் பதிவாகியிருக்கும். ஒவ்வொரு பதிவும், பதிவிற்கான இணைப்பும் (Post links) கூகிளில் Index ஆகியிருக்கும்.

அடுமட்டுமல்லாமல், பிரபலமான திரட்டிகளில் நீங்கள் இணைத்த பதிவுகளின் இணைப்புகள், நண்பர்கள் அவர்களுடைய தளத்தில் உங்களது வலைப்பதிவிற்குக் கொடுத்த இணைப்புகள் என அனைத்தும் அங்கங்கே பதியப்பட்டிருக்கும். இவ்வாறான இணைப்புகளை Backlinks என்று அழைப்பார்கள்.

இவ்வாறு உங்களுடைய டொமைன் பெயரிலிருக்கும் நூற்றுக்கணக்கான (சில நேரங்களில் ஆயிரக்கணக்கில் கூட இருக்கும். அந்தந்த தளங்களின் தன்மையைப்




பொறுத்து.) backlings அனைத்தும் அங்கங்கே இருக்கும்.

இந்த backling களை அழுத்தி, உங்கள் வலைத் தளங்களுக்கு வாசகர்கள் வருகை தருவார்கள். அவ்வாறான இணைப்புகளை, உங்களது டொமைன் காலாவதியான ஆன பிறகு அழுத்தினால், புதியதாக உங்களது டொமைனை வாங்கியவர்களின் தளங்களுக்கு அந்த வாசகர்கள் சென்றுவிடுவார்கள்.

இந்த backlings களுக்காகவும், உங்களுடைய ஒருவருட கால உழைப்பின் பெரும் பகுதியை, உங்களது டொமைனை வாங்குவதன் மூலம் அவர்கள் பெறுகிறார்கள். இதனால் அவர்களது தளங்கள் வெகு விரைவில் பிரபலமடைய வாய்ப்புள்ளது.

**மாற்றுவழி உள்ளதா?**

காலாவதியான டொமைனைப் பெறுவதற்கு மாற்று வழி உண்டா என்றால் அரிதான சில வழிகள் உள்ளன.

முதல் வழி காலவதியான டொமைனை சிறிது காலம் சில நிறுவனங்கள் அப்படியே வைத்திருக்கும். அவற்றைப் புதுபிக்க பத்து மடங்கு தொகையை கேட்பார்கள். உதாரணமாக ஒரு டொமைனைப் புதுபிக்க 600 ரூபாய் என்றால், உங்களது காலவதியான டொமைனைப் புதுப்பிக்க 5000 ரூபாய் கட்டச் சொல்வார்கள். (ஒரு சில நிறுவனங்களில் மட்டும் இந்த முறை செயல்படுத்தப் படுகிறது)

பெரும்பாலான நிறுவனங்கள், அவர்களே கூட காலாவதியாகும் டொமைனின் பெறுமதி, பிரபலத்தன்மை ஆகியவற்றைப்பொறுத்து, மற்றவர்களுக்கு விற்றுவிடுவார்கள். அல்லது கண்கொத்திப் பாம்புபோல காத்திருக்கும் டொமைன் திருடர்கள் அதை வாங்கி, தங்களுடைய வலைத்தளங்களுக்கு, அல்லது வியாபார நோக்கம் கொண்ட நிறுவன வலைத் தளங்களுக்குப் பயன்படும் வகையில் அதை Redirect செய்துவிடுவார்கள்.

அவ்வாறு செய்யும்பொழுது உங்களுடைய தளத்திற்கு வர நினைத்து உங்களுடைய டொமைன் பெயரில் உள்ள இணைப்புகளை அழுத்தும்பொழுது தானாகவே, அவர்கள் உங்களது டொமைன் பெயரில் உருவாக்கி வைத்திருக்கும் வலைத்தளங்களுக்குச் சென்றுவிடும்.






உதாரணமாக ஒரு நாளைக்கு 500 பேர் உங்களது தளத்திற்கு வருவார்களெனில் அந்த இணைப்பின் மூலம் வருபவர்கள் கணிசமாக அவர்களுடைய தளத்திற்குச் செல்வார்கள். இதனால் அவர்களின் தற்போதைய தளம் பிரபலமடைய வாய்ப்பு ஏற்படும்.

**என்ன இலாபம்?**

மிகப்பெரிய இலாபம் அவர்களுக்கு இருக்கிறது. அதாவது உங்களுடைய ஒரு வருடகாலத்திற்கு உழைப்பின் பகுதியை அவர்கள் ஒரு நொடியில் அடைந்து விடுவார்கள். உழைத்துப் பதிவிட்ட பதிவுகளின் இணைப்புகள் அனைத்தும் அவர்களுக்கே சொந்தமாகிவிடும்.

இதை ஒரு தொழிலாகவே செய்யும் களவானிகளும் உண்டு. அதாவது நன்றாக பிரபலமடைந்த டொமைன் பெயர் எக்ஸ்பயர் ஆனவுடனேயே அதை வாங்கி விடுவது.

அதுபோன்று வாசகர்களை வரவழைப்பதால், அந்த பதிய தளமான பிரபலமடையும். வியாபார நோக்கம் கொண்ட, விளம்பரங்களைப் பயன்படுத்தி சம்பாதிக்கும் தளங்களே இவ்வாறான செயல்களில் ஈடுபடுகின்றன.

**இப்படியும் நடக்கும்**

காலாவதியான டொமைனுக்குரிய வெப்சைட்களானது, ஒரு மிகப்பெரிய பள்ளியின் வெப்சைட்டாக இருக்கலாம். ஒரு மீடியமான வியாபார நிறுவனத்தின் வெப்சைட்டாக இருக்கலாம். ஒரு வளரும் நிறுவனத்திற்கான தளமாக இருந்து, அந்த வலைத்தளத்திற்கு டொமைன் காலாவதி ஆகியிருக்கலாம்.

எப்படியும் இதுபோன்ற நிறுவனங்கள் மீண்டும் அதே டொமைன் பெயரைப் பெறமுயற்சிக்கும். காரணம் அந்த வியாபார நிறுவனம் மிகப்பெரியதாக இருந்து, உலகம் முழுவதும் அந்த தளத்தின் மூலம் விபாபாரம் நடக்க வாய்ப்பு இருக்கும். ஒரு பள்ளியாக இருப்பின் அந்த பள்ளியின் பெயரிலேயே இருக்கும் டொமைன் பெயரை பலரும் பயன்படுத்தியிருப்பார்கள். இதனால் அப்பள்ளியின் பெயரிலேயே அமைந்த அந்த டொமைன் பெயரை மீண்டும் வாங்க முயற்சிக்கும்.

இவ்வாறு அவ்வாறான வெப்சைட்களின் டொமைன் பெயர் பிரபலமான நிறுவனங்களின் பெயராக இருப்பின், எப்படியும் அவர்கள் அதே டொமைனைப் பெற முயற்சிப்பார்கள். அப்படி முயற்சிக்கும்போது, அந்த டொமைனை புதியதாக வாங்கியவர்கள் பேரம்பேசி, மீண்டும் அந்த நிறுவனத்திற்கே விற்றுவிடுவார்கள். இதில் நல்ல இலாபம் பார்ப்பார்கள். இதையே தொழிலாக செய்பவர்களும் இருக்கிறார்கள்.

**தடுக்க முடியாதா?**

இது என்னுடைய டொமைன்.. இவர்கள் பயன்படுத்து கிறார்கள் என தடுக்க முடியாதா என்று கேட்டால், நிச்சயமாக முடியாது. உங்களுக்கு வழங்கப்பட்ட முடிவு திகதிக்குப் பிறகு நீங்கள் அந்த டொமைனை வாங்கிவில்லை என்றால் நிச்சயம் அதைத் தடுக்க முடியாது. அதற்கான விதிமுறைகள் இல்லை.

குறிப்பிட்ட திகதியில் நீங்கள் வாங்காவிட்டாலும் மேலும் சில நாட்கள் உங்களுக்கென நீட்டிப்பார்கள். அந்த தேதியையும் கடந்துவிட்டால் உங்களது டொமைன் உங்களுக்கு இல்லை.


**வேறென்ன செய்யலாம்?**

அதே பெயரில் வேண்டுமென நினைத்தால், ஓரளவிற்கு அதே பெயரை ஒத்த டொமைன் வாங்கிக்கொள்ளலாம். முடியும் இடத்தில் வலைத்தளம்.காம் என உங்களது டொமைன் இருந்திருந்தால், வலைத்தளம்.net, வலைத் தளம்.org போன்று ஏதேனும் ஒரு டொமைன் பெயரை வாங்கலாம். ஆனால் மேற்குறிப்பிட்ட இழப்புக்களைத் தவிர்க்கவே முடியாது. நீங்கள் நான்கைந்து வருடமாக சரியாக டொமைனை Renewal செய்திருந்தாலும், இந்த முறை மட்டுமே தவறவிட்டுவிட்டேன் என்று நீங்கள் கூறினாலும், உங்களது நான்கைந்து வருட உழைப்பும், பிறருக்கு மிக எளிதாகச் சென்றுவிடுகிறது.

எனவேதான் உங்களது டொமைன் காலாவதி ஆகிற தென்றால், உடனடியாக அதை Renewal செய்து விடுங்கள். உங்களது உழைப்பு மட்டுமல்லாமல், உங்களது வாசகர்கள் ஏமாறாமல் உங்களது தளத்திற்கு வந்து படித்துப் பயன்பெறுவார்கள்.

சாதாரண வலைப்பூ முதல், வியாபார , பள்ளி, மற்றும் மிகப்பெரிய வர்த்தக நிறுவன வலைத்தளங்கள் என எந்த ஒரு வலைத்தளங்களுக்கும் இதுதான் நிலைமை. எனவே உங்களது டொமைனை நீங்கள் தொடர்ச்சியாக தக்கவைக்க, Domain Expire ஆவதற்கு முன்பு Renewal செய்துவிடுங்கள்

# வந்துவிட்டது குரோம்காஸ்ட்....




கடந்த ஒரு வாரமாக குரோம்காஸ்டைச் சோதனை செய்துவருகிறேன். குரோம்காஸ்ட் என்பது கூகிள் விற்கும் ஒரு குட்டி dongle. HDMI port இல் நுழையக்கூடியது. தனியாக மின் இணைப்பு வேண்டும். மின் இணைப்புக்கு TV இல் உள்ள USB போர்ட்டையேகூட பயன்படுத்திக்கொள்ளலாம். என்னிடம் உள்ள TV இல் இரண்டு HDMI, இரண்டு USB ports உள்ளன. உங்கள் செல்பேசி அல்லது கணினியில் பார்க்கும் வீடியோக்களை குரோம்காஸ்ட் மூலமாக உங்கள் TV இற்கு அனுப்பலாம். பெரிய திரையில் பார்க்கலாம்.

Bandwith அதிகமாகி, இணைய மாதக் கட்டணம் குறையும்போது Cable TVஎன்பது சரித்திரமாகிப் போய்விடும். ஒருசில ஆலை வரிகளில் எதை எப்போது காண்பிக்கிறார்கள் என்பதற்காகக் காத்திருக்கவேண்டிய நிலை ஆகியவை போய்விடும். குறைந்தபட்சம், இணையத்துக்குச் செல்வழிக்க அஞ்சாத மத்திய தர, நகரக் குடும்பங்களிலாவது cable / DTH காணாமல் போய்விடும்.


என் iPhone,iPad ஆகியவற்றிலிருந்து YouTube TED குறுஞ்செயலிகளில் வரக்கூடிய வீடியோக்களை குரோம்காஸ்ட் செய்துபார்த்தேன். TED மிகவும் தொல்லை தந்தது. அது எதிர்பார்க்கும் பேண்ட்வித் என்னிடம் இல்லையோ என்னவோ. ஆனால் YouTube இல் பிரச்சினை ஏதும் இல்லை. ஆனால் FastForward, Rewind ஆகியவற்றைச் செய்யமுடியவில்லை. எனவே TV Cast என்ற குறுஞ்செயலியைத் தருவித்து, அதற்கான சில கட்டுப்பாட்டுப் பட்டைகளை விலை கொடுத்து வாங்கிக்கொண்டேன். இப்போது வேண்டிய இடத்துக்குத் தாவ முடிந்தது. YouTube போன்ற வற்றில் வரும் விளம்பரங்களைத் தொலைக்க முடிந்தது.

இப்போது TED வீடியோக்களை மிகவும் ஆனந்தமாகப் பார்க்க முடிகிறது.

**கணினிக்குறள் ......**

- capy paste செய்து வாழ்வாரே வாழ்வார்
  மற்றவரெல்லாம் coding செய்து சாவர்.
- எம்மொழி மறந்தார்க்கும் வேலையுண்டாம்
  வேலையில்லை ஜாவாவை மறந்தார்க்கு
- Bug கண்டுபிடித்தாரே ஒருத்தர் அவர் நாண
  DeBug செய்துவிடல் வேண்டும்.

# கணினி Viruses என்றால் என்ன?



கணினி Virus - இந்த சொல்லை நீங்கள் கட்டாயம் கேட்டிருப்பீர்கள், இப்போதுதான் கணினியை பாவிக்க தொடங்குபவராக இருந்தாலும், கணினியை நீண்ட நாட்களாகப் பாவித்தவராக இருந்தாலும், நிச்சயம் Virus களைப் பற்றி அறிந்திருப்பீர்கள். கணினி Virus கள் பற்றி பலர் உங்களுக்கு இலவச ஆலோசனைகளும் சொல்லியிருக்கலாம், அது உங்களுக்கு Virus களைப் பற்றி எந்தளவுக்கு தெளிவை ஏற்படுத்தியது என்பது உங்களுக்கே வெளிச்சம். Virus கள் பற்றிய ஒரு தெளிவை ஏற்படுத் துவதே இந்தக் கட்டுரையின் நோக்கம்.

இந்த கட்டுரையில் நாம் கணினி Virus கள் என்றால் என்ன, மற்றும் அவற்றின் வகைகள், Virus கள் எதிர்ப்பு (Anti - Virus) என்றால் என்ன அவை எப்படி Virus களில் இருந்து உங்கள் கணினிகளை பாதுகாக்கின்றன என்று பார்க்கலாம்.

**கணினி Virus கள் என்றால் என்ன?**

Virus என்ற சொல்லைக் கேட்டவுடன் நாம் உயிரியல் Virus களைப் போல இந்த கணினி Virus களை எண்ணிவிடக்கூடாது. கணினி Virus கள் ஒன்றும் இயற்கையானவை அல்ல, அப்படியென்றால் இந்த கணினி Virus கள் என்றால் என்ன?


கணினி Virus கள் என்பன நீங்கள் உங்கள் கணினியில் பயன்படுத்தும் MSWord, MSExcel,, குரோம் போன்ற ஒரு மென்பொருள்தான்.

ஆக கணினி Virus கள் என்பன, சாதாரணமாக இயங்கிக்கொண்டிருக்கும் கணினியின் செயற்பாடுகளில் இடையூறு விளைவித்து கணினியின் செயற்பாட்டை முழுமையாகவோ பகுதியாகவோ பாதிக்கக்கூடிய கணினி மென்பொருளாகும். இவற்றிற்கு இருக்கும் ஒரு முக்கிய பண்பு தன்னைப்போல ஒரு நகலை உருவாக்கி இன்னுமொரு கணினியையும் தாக்கமுடியும். இப்படி இவற்றால் பல்வேறு கணினிகளுக்கு பரவிச்செல்ல முடியும். இப்போது ஏன் இந்தப் மென்பொருளுக்கு ஏன் Virus என்று பெயரிட்டார்கள் என்பது புரிந்திருக்கும்.

கணினி Virus கள் உருவாகுவதற்கு காரணமாக இருப்பன, கணினித் தொழில்நுட்பத்தில் இருக்கும் குறைபாடுகளேயாகும். ஆழமாக ஆராய வேண்டும் என்றால் நீங்கள் நிச்சயம் கணினி அறிவியல் (computer science) அடிப்படையில் இதனை பார்க்க வேண்டும்.

எனது கணினி ஆசிரியர் அடிக்கடி சொல்லுவது, அவர் சொன்னதை தமிழுக்கு மொழிபெயர்த்தால் இப்படி வரும், "முறைமை (system) என்று ஒன்று இருக்கும் வரை அதில் ஓட்டை என்று ஒன்று இருந்துகொண்டே இருக்கும்". அதாவது முற்றுமுழுதாக பூரணப்படுத்தப்பட்ட தொழில்நுட்பம் என்று ஒன்றும் கிடையாது அல்லது இதுவரை அப்படி ஒன்றை வடிவமைப்பது தொழில்நுட்ப இரீதியாக சாத்தியமற்ற ஒன்றே. இப்படியான ஓட்டைகளே இந்த Virus கள் இயங்க வழிவகுக்கின்றன.

கணினி Virus கள் உருவாகியதற்கும், இன்னும் உருவாகிக்கொண்டிருப்பதற்கும் பல்வேறு துணைக் காரணங்களை நாம் காணலாம். சுயலாபம் கருதி,





அரசியல் காரணங்களுக்காக, போட்டி நிறுவனங்களை வீழ்த்த, மற்றும் Anti - Virus களை விற்பனை செய்வதற்கு எனப் பறபல காரணங்கள். வெறும் பொழுதுபோக்கிறகாகவும் Virus நிரல்களை உருவாக்கு பவர்களும் உண்டு.

சில தீவிரமான Virus கள், பல்வேறுபட்ட கணினி அறிவியல் ஆராய்ச்சியின் பக்கவிளைவாகவே உருவாகுகின்றன. இப்படியான ஆழமான ஆராய்சிகள், கணினி தொழில்நுட்பத்தில் உள்ள சில ஓட்டைகளை வெளிச்சம் போட்டுக் காட்டிவிடும்.

**கணினி Virus களில் பலவகை உண்டு.**

நாம் பொதுவாக கணினி Virus கள் என்று பொதுப் படையாக அழைத்தாலும், Virus களில் பலவகை உண்டு. அவற்றில் செயல்முறைக்கு ஏற்ப அவற்றை வகைப்படுத்தியுள்ளனர். அப்படிப்பட்ட பொதுவான வகைகளைப் பார்ப்போம்.

**மோல்வெயர் (Malware)**

கணினியின் செயல்பாட்டை பாதிக்கும் அனைத்து நிரல்களை மோல்வெயர் என்று அழைக்கலாம். இன்று கணினித் துறையில் பல்வேறுபட்ட தீங்கிழைக்கும் நிரல்களை மோல்வெயர் என்று தான் அழைகின்றனர். கணினி virus இல் மோல்வெயரும் ஒரு வகைதான் என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

மோல்வெயர்கள் ஒரு வெளிப்படையான ஒரு மென்பொருள் போலவோ, அல்லது உங்களுக்கே தெரியாமல் மறைந்திருந்து இயங்கும் ஒரு நிரலாகவோ இருக்கலாம்.

**Virus கள் (Virus)**

இவை பொதுவாக கணினியில் உள்ள வேறு எதாவது நிரலுடனும் அல்லது கோப்புகளில் ஒட்டிக்கொள்ளும். தனித்து இயங்காத இந்த Virus கள், இவை ஒட்டிக்கொண்டுள்ள நிரல்கள் அல்லது கோப்புக்கள் திறக்கப்படும்போது செயல்படத் தொடங்கும்.

இப்படி செயல்படும் போது இவை மேலும் வேறு நிரல்கள், கோப்புகளில் தன்னையும் இணைத்துக்கொள்ளும், இப்படி Virus இணைந்துகொண்ட நிரல்கள், கோப்புக்களை இன்னுமொரு கணினிக்கு எடுத்துச் செல்லும்போது அந்தக் கணினியிலும் உள்ள கோப்புக்களில் மீண்டும் மீண்டும் பதிந்துகொள்ளும்.

இவை கணினிக்கு வந்தபின், அதில் இருக்கும் கோப்புகளை அழிப்பது, செயல்முறைமையின் சில பகுதிகளை செயல்படாமல் தடுப்பது. வன்தட்டினை செயலிழக்க செய்வது, கணினிகளை அடிக்கடி மீழ் ஆரம்பிப்பது, என்று பல தலையிடிகளை உருவாகலாம்.

இப்படித்தான் நண்பர்களின் கணினியில் உள்ள Virusகள் flash drive மூலமும் மின்னஞ்சல் இணைப்புகளில் மூலமும் உங்கள் கணினிக்கு வந்துசேருகின்றன.

**ரோஜன் ஹோர்ஸ் (Trojan Horse)**

இவ்வகையான நிரல்கள், ஒழிந்துகொண்டு வேலை செய்வன. அதாவது உண்மையிலேயே பயனுள்ள எதாவது மென்பொருளில் ஒழிந்துகொண்டு, உங்களுக்கே தெரியாமல் உங்கள் கணினியில் இருக்கும் தகவல்களை களவெடுத்து அவற்றை தேவை யான இடத்திற்கு அனுப்பிவிடும். அல்லது தகவல்களை அழிக்கலாம், உங்கள் கணினியை செயலிழக்கவும் செய்யலாம்.

ஆனால் பெரும்பாலும் தகவல்களை பயனருக்கு தெரியாமல் களவாடுவதற்கே இந்த ட்ரோஜன் ஹோர்ஸ்கள் பயன்படுகின்றன. அதேபோல இவை உங்கள் கணினியை ஒரு இணையதிருடன், தொலை நிலை அணுகல் மூலம் (Remote access) கட்டுப் படுத்தக் கூடியதாகவும் மாற்றிவிடுகின்றது.

இவை நம்பகமான, பயனுள்ள மென்பொருள் போல நடிப்பதால், பெரும்பாலான பயனர்கள், குறிப்பாக இணையப் பயனர்கள் ஏமாந்து இதனை தங்கள் கணினியில் நிறுவிவிடுகின்றனர். இவை நல்ல பிள்ளை களைப் போல நடிப்பதால் இவற்றை கண்டறிந்து நிறுவல் நீக்கம் (uninstall) செய்வது கடினம்.

இவ்வளவு வேலைகளை செய்யும் இந்த ட்ரோஜான் ஹோர்ஸ் இல் உள்ள ஒரே ஒரு நன்மை. பொதுவாக இவை ஒரு கணினியில் இருந்து இன்னுமொரு

கணினிக்கு சாதாரண Virus கள் போல பரவுவதில்லை. இப்படி பரவக்கூடாது என்று ஒரு சட்டமும் இல்லை. அப்படி பரவும் சில டோர்ஜன் ஹோர்ஸ்களும் உண்டு.

**ரூட்கிட் (Rootkit)**

இவையும் மறைந்திருந்து செயல்படும் ஒருவகையான நிரல்கள், ஆனால் ட்ரோஜான் ஹோஸ் போல நன்மை செய்வதுபோல் உள்நுழைவதில்லை. அது மட்டுமல்லாது இவற்றின் அமைப்பே மிகவும் மறை முகமானது என்பதால், சாதாரண தேடுதல் நடவடிக்கை மூலம் ரூட்கிட்டை கண்டறிய முடிவதில்லை. சில வேளைகளில், இல்லை, பெரும்பாலும் AntiVirus மென் பொருள் கூட ரூட்கிட்டை கண்டறிய முடிவதில்லை.


இவை கணினியில் நிறுவப்பட்டுவிட்டால், பின்னர் அந்தக்கணினியின் முழுக்கட்டுப்பாட்டையும் இந்த ரூட்கிட்கள் தன்வசப்படுத்திவிடும். இவை பெரும் பாலும் கணினியில் உள்ள தகவல்களை அதாவது கடவுச்சொல், வங்கி அட்டை இலக்கங்கள், மற்றும் வேறு தகவல்களை, வேறு எந்த முறையிலும் கண்டறி யாத வண்ணம் தத்துருபமாக திருடக்கூடியன. இவ்வாறு இவை திருடுவது கணினியின் அடிப்படைக் கட்டமைப்பில் நடைபெறுவதால், AntiVirus மென் பொருள்களால் இந்த திருட்டையும் கண்டறிய முடிவ தில்லை.

அதேபோல ஒரு இயங்கு முறைமையின் மிக அடிப் படைத்தளத்தில் இவை இயங்குவதால், பெரும் பாலும் கண்டறிவதே கடினம் என்னும்போது அதனை அழிப்பது என்பது முடியதகாரியமாகவே இருக்கும். சில விசேட வகையான ரூட்கிட்கள் இயங்கு முறைமையின் கேர்னல் அமைப்பில் இயங்குவதால், இப்படியான ரூட்கிட்களை அளிக்க முதலிருந்து மீண்டும் இயங்கு முறைமையை நிறுவவேண்டிய தேவை ஏற்படலாம்.

ரூட்கிட்களை கண்டறிவதற்கு என்றே சில விசேட வகையான நிரல்களை சில AntiVirus நிறுவனங்கள் தருகின்றன.

**வோர்ம் (Worm)**

இவை தனித்து இயங்கக்கூடியதும், தன்னைத் தானே பிரதிசெய்து, வலையமைப்பில் இணைந்துள்ள மற்றைய கணினிகளிலும் நிறுவக்கூடியது. இவை பெரும்பாலும் கணினியின் வலையமைப்பில் உள்ள பாதுகாப்புச் செயன்முறைகளில் உள்ள ஓட்டைகளைப் பயன்படுத்தியே தன்னைத் தானே பிரதி செய்து பரவுகின்றன.




இந்த வோர்ம் நிரல்கள் பெரும்பாலும் கணினியின் வலையமைப்பில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தி விடுகின்றன. சில வோர்ம் நிரல்கள் கணினியின் செயல் பாட்டை பாதிப்பதாக இருந்தாலும், பெரும்பாலான வோர்ம்கள், வைரசைப் போல கணினியில் உள்ள கோப்புகளையும் மென்பொருட்களையோ பாதிப் பதில்லை, மாறாக இவை கணினிகள் இணைந்துள்ள வலையமைப்பயே குறிவைகின்றன.

வலையமைப்பைத் தாக்குவதன் மூலம், வலைய மைப்பை செயலிழக்க வைப்பதோ, அல்லது வலைய மைப்பின் மூலம் இடம்பெறும் தொடர் பாடல்களை ஒட்டுக்கேட்பது மற்றும் மாற்றிய மைப்பது போன்ற வேலைகளிலும் இது பயன்படும்.

**ஸ்பைவேயர் (Spyware)**

பேர் சொல்வதுபோல உங்கள் கணினியில் இருந்து தகவல்களை திருடுவதே இந்த நிரல்களின் ஒரே இலக்கு. உங்கள் கடவுச்சொல், உங்கள் வங்கித்தகவல்கள் போன்றவற்றையும் இவை திருடுகின்றன. இவை இப்படியான தகவல்களை மட்டும் திருடுவதில்லை.

நீங்கள் பார்க்கும் இணையதளங்களின் முகவரிகள், உங்கள் புகைப்படங்கள் இப்படி நீங்கள் கணினியில் செய்யும் எல்லா வேலைகளையும் இவை திருடக் கூடியன.

சில நிரல்கள், மடிக்கணினியின் ஒளிப்படக்கருவி, webcam போன்றவற்றை சுயாதீனமாக, உங்களுக்கு தெரியாமல் இயக்கி, அந்த காணொளிகளையும் திருடு கின்றன ! அகவே உசாராக இருப்பது முக்கியம்.

பெரும்பாலும் இவை இணையம் மூலமே உங்கள் கணினிக்கு வருகின்றது. நீங்கள் தரவிறக்கம் செய்யும் மென்பொருளிலுள்ள இணைய கருவிப்பட்டை, மிகச் சிறந்த ஸ்பைவேர்கள்.

ட்ரோஜன் ஹோர்ஸ் உம் ஒருவகையான ஸ்பைவேயர் தான்.

ஸ்பைவேயர்களை அழிப்பதற்கென்றே ஸ்பைவேயர் எதிர்ப்பு நிரல்கள் உண்டு. ஆனால் இப்போது வரும் AntiVirus மென்பொருள்கள் இந்த ஸ்பைவேயர்களை கண்டு அழிக்கும் ஆற்றலையும் கொண்டுள்ளன.

இன்னும் பல

மேலே கூறிய வகையான ஏஜசுருளுகளை விடவும் மேலும் பலவகையான பயனருக்கும், கணினிக்கும் பங்கம் விளைவிக்கக்கூடிய நச்சு நிரல்கள் உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு எல்லையில் வேலை செய்கிறது. இவற்றில் இருந்து எப்படி பாதுகாப்பாக இருப்பது என்று அடுத்ததாக பார்க்கலாம்.

**AntiVirus மென்பொருள்- தீர்வாகுமா?**

பொதுவாக AntiVirus என்றவுடன் நாம் என்ன நினைப்போம்? நிச்சயமாக என்ன நினைப்போமோ அதுவல்ல இது! எனக்கு அடிக்கடி ஏற்படும் பிரச்சினை நண்பர்கள் அல்லது என் வாடிக்கையாளர்கள் என்னை தொலைபேசியில் அழைத்து, "என்ன தம்பி AntiVirus போட்டிருந்தும் Virus வந்துவிட்டதே, கணினி அடிக்கடி மீழ் ஆரம்பிக்கிறது, சேமித்த கோப்பை காணவில்லை, desktop இல் படத்தை காணவில்லை" இப்படி பல பல.

AntiVirus மென்பொருள்களை அவர்களுக்கு நிறுவிக் கொடுக்கும் போதும் நான் சொல்லிக் கொடுத்துவிட்டுதான் வருகிறேன், ஆனால் ஏனோ பெரும்பாலானவர்களுக்கு புரிவதில்லை.

AntiVirus மென்பொருள்கள் என்பன தடுப்பூசி போல அல்ல. ஒரு தடவை நிறுவிவிட்டால் அதன்பின் மீண்டும் எந்தவொரு நச்சிநிரலும் வராமல் இருப்பதற்கு. சற்று விளக்கமாக AntiVirus மென்பொருள்கள் எவ்வாறு வேலைசெய்கின்றன என்று பாப்போம். உங்களுக்கு ஏன் AntiVirus களால், எல்லா Virus களையும் பிடிக்க முடிவதில்லை என்று விளங்க உதவும்.

Virus கள் எல்லாமே நிரல்கள் (Programme) தானே, ஆனால் ஒவ்வொன்றும் தொழில்படும் முறை வித்தியாசப்படும். ஒன்றுக்கு மேற்பட்ட Virus கள் ஒரே முறையை பயன்படுத்தி தொழிற்படலாம். இந்த முறை களை அந்த அந்த Virus களின் ஒப்பம்(signature) என்று வேண்டுமென்றால் கூறலாம்.

AntiVirus களுக்கு இப்படி பல்வேறு வகையான ஒப்பங்களை இனம்கானக் கூடியதாக இருக்கும். உங்கள் கணினியில் உள்ள ஒவ்வொரு Programme களும் இயங்கத்தொடங்கும் போது இந்த AntiVirus அந்த நிரல்களை தன்னிடம் உள்ள ஒப்பங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கும். இப்படி ஒப்பிடும் போடு இயங்கப்போகும் புரோகிராமின் ஒப்பம் AntiVirus ல் இருக்கும் ஒப்பத்தோடு பொருந்தினால் உங்கள் AntiVirus, உங்களுக்கு "ஒரு Virus" அகப்பட்டுவிட்டதாக தகவல் தரும்.

இப்போதுள்ள சில AntiVirus, இப்படி ஒப்பங்களை மட்டும் சோதிக்காது, கூடவே சில பொதுவான கெட்ட பண்புகளையும் சோதிக்கும். அதாவது திருடன் என்றால் திருடுவான், திருட்டு Kop முழிப்பான், போலிசுக்கு கையூட்டுக் கொடுப்பன் என்பதுபோல(??!!) நிரல்களின் நடத்தைகளையும் இந்த AntiVirus சோதிக்கின்றன.

பெரும்பாலான Virusகள் இந்த வழியில் மாட்டுப் பட்டுவிடும். ஆனால் புதிதாக ஒரு முறையைப் பயன்படுத்தி குறிப்பிட்ட Virus தொழிற்பட்டால், அதனது தொழில்படும் முறையின் ஒப்பமோ, அல்லது அதன் நடத்தயை பற்றிய அறிவற்ற Antivirus களால் இந்த புரோகிராமை Virus என்று முத்திரை குத்தி அழிக்கமுடிவதில்லை.

இதனால் தான் Antivirus கள் தினம் தினம், ஏன்? சிலவேளைகளில் மணிக்கொருமுறை கூட தன் ஒப்பங்களை (signatures) புதுப்பித்துக்கொண்டே இருக்கிறது. இப்படி புதுப்பிப்பதால் புதிதாக களமிறங்கும் Virus களை அவற்றால் பிடிக்க முடிகிறது. இருந்தும் சில Virus கள், இந்த Antivirus நிறுவனங்கள் அந்த வைரசின் ஒப்பத்தை கண்டுபிடித்து அதற்கான ஒப்ப முறைமையை தரவேற்ற முதலே, மிகப்பெரிய பதிப்புகளை ஏற்படுத்தி விடுகிறது.

அடுத்தது இணையத்தில் கணினி இணைக்கப் படிருந்தாலே, அக்கணினியில் இருக்கும் Antivirus புரோகிராமால் புதிய Virus ஒப்பங்களை தரவிறக்கி சோதிக்க முடியும். ஆக இணையத்தில் அடிக்கடி மேம்படுத்தப்படாத Antivirus கள் பெரும்பாலும் நாம் எதிர்பார்க்கும் அளவிற்கு பாதுகாப்பை வழங்கு வதில்லை.

அதுபோக, சிலவகையான மோல்வேயர் மற்றும் ரூட்கிட்களை Antivirus களால் கண்டுபிடிக்கவே முடிவதில்லை. ஆக அவற்றை இந்த Antivirusகளால் கட்டுப் படுத்த முடிவதில்லை.

இணையத்தை பயன்படுத்துவதில் கவனம் தேவை

முன்னொரு காலத்தில் Floppy, ஊனு போன்றவற்றில்

பரவிய Virus கள் இன்று பெரும்பாலும் இணையம் மூலமே பரவுகின்றன. சில இணையத்தளங்களை நீங்கள் பார்வையிடும் போதே அவை உங்கள் கணினியில் Virus களை நிறுவி விடுகின்றன.

புதிய இணைய உலாவிகள், அதாவது புதிய கூகிள் குரோம், பயர்பொக்ஸ் போன்றன இதை தடுக்க முயன்றாலும், அடோபி பிளாஷ், மற்றும் ஜாவா போன்ற plugins உள்ள குறைபாடுகள் காரணமாக Virus கள் வருவதை தடுக்க முடிவதில்லை.

மேலும் நீங்கள் தரவிறக்கும் நிரல்கள், பாடல்கள், கோப்புகள் என்பனவும் Virus களை கொண்டுவரலாம். கூகிள் என்பது வெறும் தேடல் பொறி மட்டுமே, அதில் வருவது எல்லாமே நல்லதும் உண்மையானதும் என்ற கருத்தை உடனே கைவிடுங்கள். நம்பிக்கையானவர்களிடம் இருந்து மட்டுமே கோப்புக்களை வாங்குங்கள் அல்லது நம்பிக்கையான இணையத் தளத்தில் இருந்து மட்டுமே தரவிறக்குங்கள்.

பெரும்பாலும் காசுகொடுத்து வாங்க வேண்டிய மென்பொருள்களை இலவசமாக தரவிறக்கியே பெரும் பாலும் நம்மவர் Virus களிடம் மாட்டிக்கொள்கின்றனர்.

அதேபோல OnlineGames விளையாடும் இணையத் தளங்கள், பாலியல் சார்ந்த தளங்களும் Virus களை கணினிக்கு பரப்புவதில் முன்னணியில் இருக்கின்றன.

பார்த்து நடக்கவேண்டியது உங்கள் பொறுப்பு. AntiVirus களால் ஒரு எல்லை மட்டுமே பாதுகாக்க முடியும். AntiVirus ஐ நிறுவியாச்சு என்று நீங்கள் இணையத்தில் கவனமின்றி உலாவந்தால், பின்விளைவுகளை ஒருவராலும் கட்டுப்படுத்த முடியாது என்பதே இந்த தொழில்நுட்ப உலகின் நிதர்சன உண்மை.

எனது ஆசிரியர் சொன்னது மீண்டும் எனக்கு ஞாபகம் வருகிறது.

“எங்கெங்கு முறைமைகள் உண்டோ, அங்கே நிச்சயம் ஓட்டைகளும் இருக்கும்”, சிலர் அந்த ஓட்டைகளை பாதகமான விளைவுகளுக்கும் பயன்படுத்துவர்.


## Advertisment Rate Card

**In Pages**

| Size | Full Colour | Two Colour | One Colour |
|---|---|---|---|
| Full Page (21.1cm x14.8cm) | 12,000 | 7,000 | 5,000 |
| Half Page (10.5cm x 14.8 cm) | 7,000 | 4,000 | 2,000 |
| 1/4 page (10.5cm x 7.4 cm) | 6,000 | 3,000 | 2,000 |
| Strip (4cm x 14.8cm) | 5,000 | 3,000 | 2,000 |
| Box (4cm x 7.4 cm) | 4,000 | 1,500 | 1,000 |

**Cover Page Full Colour**

Back - Rs. 25,000

Front in - Rs. 22,500

Back in - Rs. 20,000

**கம்ப்யூட்டர் ருடே கணினிப் பிரியர்களின் கனவுச் சஞ்சிகை**


**கம்ப்யூட்டர் ருடே சஞ்சிகையின் மாதாந்த ஒன்றுகூடல்**

காலம் : 17.04.2015

நேரம் : மாலை 05.00

இடம் : **IDM Nations Campus, Jaffna.**

# PENINSULA
Technologies (Pvt) Ltd

## Our Services

- Sales
- Repair
- Imports
- Computer Consultation
- Computer Education



255 1/1, Stanly Road, Jaffna
Tel : 077 8475072

Email : peninsulatechno@gmail.com

அனைவருக்கும் எமது இனிய சித்திரைப் புதுவருட வாழ்த்துக்கள்

யாழ் நகரில்

PEARSON

University of Wolverhampton

London South Bank University




Leading to BSc (Hons) / BA (Hons) / B Eng (Hons) from more than 105 Universities in UK, USA, Australia & Canada etc...

உயர் கல்வித் துறையில் 15 வருட சிறந்த அனுபவத்துடன் இலங்கை யின் முதற்தர உயர்கல்வி நிறுவனமாக தெரிவு செய்யப்பட்டுள்ள BCAS CAMPUS இன் யாழ் வளாகத்தில் உயர் தேசிய டிப்ளோமா (HND) தொடர்வதற் கான வாய்ப்பு.

மேலுள்ள துறைகளில் (HND) ஐ நிறைவு செய்யும் மாணவர்கள் இலங்கையில் அல்லது 105 இற்கு மேற்பட்ட பிரித்தானிய, அமெரிக்க, ஆஸ்திரேலியா மற்றும் கனடா போன்ற நாடுகளின் தலை சிறந்த பல்கலைக்கழகங்களில் தமது பட்டப் படிப்பின் இறுதியாண்டினை பூர்த்தி செய்வதற்கான வாய்ப்பு.

கடந்த 15 வருடங்களில் (HND) உயர்கல்வி வழிமுறையூடாக (Pathway) சர்வதேச பட்டப்படிப்புகளை பூர்த்தி செய்து இலங்கையிலும் வெளிநாடு களிலும் உயர் தொழில் வாய்ப்புக் களை பெற்றுக் கொண்ட ஆயிரக் கணக்கான மாணவர்களைப் போன்று நீங்களும் வெற்றியாளர் ஆகலாம்.



BCAS CAMPUS
BRITISH COLLEGE OF APPLIED STUDIES

16, Point Pedro Road, Jaffna.
Tel : 021 221 9910
**Hotline : 077 710 2131**

15 YEARS

www.bcas.lk

Colombo | Mt.Lavinia | Kandy | Batticaloa | Kurunegala | Ampara | Jaffna | Qatar